For private circulation only

Book Post

https://christianhistoricalsociety.in/

# கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

• ஏப்ரல் 2024

திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும்

• விலை : ரூ 60 • இதழ் 47

WWW.CHRISTIANHISTORICALSOCIETY.IN

"உலகெங்கும்

சென்று

படைப்பிற்கெல்லாம்

நற்செய்தியைப்

பறைசாற்றுங்கள்"





சிவசைலனூர் தூய.இம்மானுவேல் ஆலயம்

WWW.CHRISTIANHISTORICALSOCIETY.IN

## பதிப்பாசிரியர்

**இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.**

திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும் என்ற நோக்கத்தில் கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கமானது தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்கள் பலரின் அரும்பெரும் முயற்சியினால் தொடங்கப்பட்டது. நம்முடைய வரலாற்றுச் சங்கத்தின் தரிசனத்தில், பல இளைஞர்கள் தன்னார்வத்தோடு தங்களையும் இணைத்து செயல்பட்டு வருகிறார்கள். மேலும் தமிழ்நாடு முழுவதும் உள்ள பல தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுடன் கைகோர்த்து இப்பணியைச் செய்து வருகின்றோம்.

உறுப்பினர்கள் மற்றும் வாசகர்களின் ஜெபத்தினாலும் பேராதரவினாலும், மிகச்சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. நமது பத்து அம்ச திட்டங்களில் மாத ஆய்விதழ், பழைய புத்தகங்களை சேகரித்தல் மற்றும் டிஜிட்டல் செய்யும் பணி, புத்தக மறுப்பதிப்பு பணிகள், மிஷன் சுற்றுப்பயணம், புத்தக வனம் இணைய செயலி, ஆவணப்படம் தயாரித்தல், கிறிஸ்தவ நூலகம், அருங்காட்சியகம் ஆய்வுக் கருத்தரங்கம் போன்ற பணிகளை செய்து வருகின்றதை நீங்கள் அறிந்ததே. இந்த ஆண்டிலும் நம்முடைய நூலக அருங்காட்சியகம் கட்டும் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. தேவைகள் சந்திக்கப்பட ஜெபித்துக்கொள்ளுங்கள்

மாத ஆய்விதழின் ஆசிரியர்கள் கள ஆய்வுகள் செய்து புதிய கட்டுரைகளை தொடர்ந்து எழுதி வருகின்றார்கள். அவர்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள். இன்னும் நம்முடைய மாத இதழில் வெளி வராத கட்டுரைகளை கொண்டு வரவும், திருச்சபை மக்கள் இன்றும் கேள்விப்படாத நிலையில் உள்ள வரலாறுகளை கொண்டு செல்லும் நோக்கில் ஜெபத்துடனும், தரிசனத்துடனும் எழுத அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இம் மாத ஆய்விதழை, வாசகர்களாகிய நீங்கள் உங்கள் நண்பர்கள், உறவினர்களுக்கு அறிமுகப்படுத்த அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன். ஒவ்வொரு மாதமும் இவ்விதழை வெளியிடுவதற்கு மிகுந்த பொருட்செலவுகள் உண்டு. மாத சந்தாவை புதுப்பித்து கொள்ளும்படி அன்புடன் நினைவுபடுத்துகிறேன். முடியுமானால் காணிக்கையாகவோ அல்லது நன்கொடையாகவோ கொடுத்து தாங்க அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பாரபரனின் பணியில்

*Manna Selvakumar*

**மன்னா செல்வகுமார்**
ஆசிரியர்

**சுஜித் ரெக்ஸ்**
வடிவமைப்பு

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

**“கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்”**
**மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள**
**G-Pay மூலம் சந்தா செலுத்த**
**91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும்,**
**காசோலை மற்றும் வரைவோலை செலுத்த**
**‘கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்’**
( Christian Historical Society )
**என்ற பெயரில் எடுக்கவும்**

**மாத ஆய்விதழ் சந்தா விபரம்**

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

Name : Christian Historical Society
A/c Number : 1748 020000 4906
Bank name : Federal Bank
IFSC code : FDRL0001748

BANK

**Contact Us**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
**கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,**
**பங்களாச் சுரண்டை-627859,**
**தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)**
**04633 290401, 91767 80001**

G Pay

இது ஒரு வரலாற்றுச் சங்க உறுப்பினர்களுக்கான பதிப்பு. சந்தா விபரங்கள் இதழின் உள்ளே.

christianhistorical@gmail.com
+91 91767 80001 christianhistoricalsociety.in tchsportal.co.in




போர்ச்சுக்கீசியர்கள் புதுப்பித்துக்கட்டிய புனித தோமையார் மலை ஆலயம்.

# சேலநாட்டிற்கு கிறிஸ்தவம் வந்த வழி ..

ஜே.பர்னபாஸ்
சேலம் வரலாற்றுச் சங்கம்

## இயேசுக் கிறிஸ்துவே திருச்சபை ஆலயத்தின் என்றும் நிலைக்கும் மூலைக்கல்

**'அந்தப்படியே: இதோ, தெரிந்துகொள்ளப்பட்டதும், விலையேறப் பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லைச் சீயோனில் வைக்கிறேன்'** (1 பேதுரு 2:6) என்று எழுதப்பட்டுள்ளது. அதில் சொல்லப்படுகிற அந்த மூலைக்கல் (Corner Stone) கிறிஸ்துவே, அவர்மீது இசைவாக எழுப்பி கட்டப்பட்டதே கிறிஸ்தவம். அது அன்றும் இன்றும் என்றும் உலகளாவியது. **'உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்'** (மாற்கு 16:15) என்று தம் சீடர்களுக்கு சொன்ன இயேசுக் கிறிஸ்துவின் இறுதிக் கட்டளையை சிரமேற்கொண்டு உலகெங்கும் சென்ற அவரது சீடர்கள் எங்கெங்கெல்லாம் சென்றார்களோ அங்கங்கெல்லாம் அவரது நற்செய்தியைப் போதித்து திருச்சபைகளை நாட்டி, கோவில்களைக் கட்டி, கிறிஸ்தவத்தை ஸ்தாபித்தார்கள்.

## தோமா அப்போஸ்தலன் :

இப்படியாக நமது இந்தியாவிற்கு வந்த அவரது பன்னிரு சீடர்களில் ஒருவர்தான் தோமா அப்போஸ்தலன். கி. பி. 52 ஆம் ஆண்டில் அவர் தென்னிந்தியாவின் மேற்குக் கடற்கரையில் உள்ள முசிறித் துறைமுகத்தில் வந்திறங்கினார். இந்த அவரது எளிமையான வருகையிலிருந்துதான் இந்தியாவில் கிறிஸ்தவத்தின் வரலாறு துவங்குகிறது. தோமா அப்போஸ்தலன் தென்னிந்தியாவின் மேற்குக் கடற்கரையில் கேரள பகுதியில் கிறிஸ்தவத்தை ஸ்தாபித்து அங்கே ஏழு ஊர்களில் கோவில்களைக் கட்டினார். பின்பு அவர் கிழக்குக் கடற்கரையில் மயிலாப்பூருக்கு வந்து கிறிஸ்தவத்தைப் போதித்தார். மயிலாப்பூர் பகுதியில் தோமா அப்போஸ்தலன் போதித்த நற்செய்தியைக் கேட்ட அநேகர் கிறிஸ்தவர்களாக மாறினர். இதைக் கண்டு பொறாமையுற்ற பிராமண குருக்கள் தோமையார் குன்றின் (Saint Thomas Mount) மீது தோமா ஜெபித்துக் கொண்டிருந்த போது அவரை ஈட்டியால் குத்திக் கொன்றனர். சென்னைப் பகுதியில் அவர் சஞ்சரித்த புனித தோமையார் மலை, சின்னமலை (Little Mount) இங்கே ஒரு குகை இருக்கிறது. இந்த குகையில் அவர் தங்கி துறவிபோல தனித்திருந்தார். அந்த குகை இன்றும் உள்ளது. நான் ஒருமுறை சென்னை சென்றபொழுது இந்த குகையைச் சென்று பார்த்தேன். தோமா அப்போஸ்தலன் மரித்தபோது அவரை அடக்கம் செய்த இடத்தில் ஒரு கோயில் கட்டப்பட்டது. கி. பி. 14 ஆம் நூற்றாண்டில் இந்தியா வந்த மார்க்கோ போலோ என்ற ஐரோப்பிய யாத்ரீகன் தனது குறிப்புகளில் மயிலாப்பூரில் உள்ள தோமா அப்போஸ்தலன் கல்லறை மீது எழுப்பப்பட்டிருந்த கோவிலைத் தான் பார்த்ததாக குறிப்பிட்டுள்ளார். பரங்கிமலை என்று அழைக்கப்படும் புனித தோமையார் மலையும், சைதாப்பேட்டையிலுள்ள சின்னமலையும் அங்குள்ள குகையும், தோமா அப்போஸ்தலனின் இரத்தசாட்சி மரணத்தோடு தொடர்புடைய இடங்கள் ஆகும். தொடர்ந்து இந்த புனித ஸ்தலங்களை ஐரோப்பிய மற்றும் ஆசிய திருப்பயணிகள் வந்து தரிசித்தவண்ணம் இருந்தனர். கி. பி. 16ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டுப் பகுதிகளுக்கு வியாபார நோக்கங்களோடு வந்த போர்ச்சிக்கீசியர்கள் பாழடைந்து கிடந்த மயிலாப்பூர் கோவில், புனித தோமையார் மலை ஆலயம், சின்னமலை கோயில் ஆகியவற்றைப் புதுப்பித்துக் கட்டினர்.

இந்திய திருச்சபை வரலாற்றில் தோமா அப்போஸ்தலனைப் பற்றிக் குறிப்பிடாத ஒரு நூலும் இருக்க முடியாது என்றே நம்புகிறேன். இயேசுக் கிறிஸ்துவின் 12 அப்போஸ்தலர்களில் ஒருவரான தோமா இந்திய துணைக் கண்டத்திற்கு வந்து, இங்கே கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்து திருச்சபைகளை ஸ்தாபித்து, இந்திய மண்ணில் இரத்த சாட்சியாக மரித்தது ஒரு ஒப்பற்ற வரலாறு இதை நாம் உலகெங்கும் பறைசாற்ற கடமைப்பட்டுள்ளோம். ஐரோப்பிய நாடுகளில் கிறிஸ்தவம் பரவுவதற்கு முன்னரே இந்தியாவில் குறிப்பாக தென்னிந்தியாவில் அதிலும் குறிப்பாக கேரளாவிற்கும், தமிழ்நாட்டிற்கும் கிறிஸ்தவம் வந்தது என்பது ஒரு வியப்பான சரித்திரச் சிறப்பு என்றால் அது மிகையாகாது. இது கி. பி. முதலாம் நூற்றாண்டு காலத்தது என்பது அதிலும் சிறப்பானது.

## ஐரோப்பியர்களின் வருகை:

ஏறத்தாழ 15 நூற்றாண்டுகள் கழித்து ஒரு இரண்டாவது கிறிஸ்தவ வருகையை நாம் இந்திய வரலாற்றில் சந்திக்கிறோம். அது கி. பி. 1498 ஆம் ஆண்டு கத்தோலிக்க கிறிஸ்தவம் வாஸ்கோடகாமா மற்றும் போர்ச்சுக்கீசியர்களுடன் அதே தென்னிந்திய மேற்குக் கடற்கரைப் பகுதிக்கு வந்து சேர்ந்தது. போர்ச்சுக்கீசியர்களின் முயற்சியால் தமிழ்நாட்டின் திருநெல்வேலியின் கிழக்குக் கடற்கரையில் வாழ்ந்த எல்லா பரதவர்களும் கிறிஸ்தவம் தழுவினது ஒரு வியப்பான சரித்திரச் சித்திரம். இந்த சமய மாற்றம் நிகழ்ந்த காலம் கி. பி. 1532 என்று சங்கை ஹிராஸ் பாதிரியாரும், சங்கை இராபர்ட் கால்டுவெல் அத்தியட்சரும் கருதினாலும், இந்தப் பகுதி மக்களுடன் வாழ்ந்த சங்கை ஹென்றிக்ஸ் சுவாமியார் கி. பி. 1586ல் தான் அச்சுவாகன மேற்றிய **'அடியார் வரலாறு'** என்ற நூலில் **'நம்முடைய நாயன் யேசுக் கிறிஸ்து பிறந்த 1533 ஆம் வருஷம் பரமென்ற சாதியில் உள்ளவர்கள் கிறிசித்தியானி மார்க்கம் புகுந்தார்கள்'** என்று குறிப்பிடுகிறார்.

## புனித சவேரியாரின் வருகை:

கி.பி.1542 ல் பரதவகுல மக்களின் மத்தியில் பணியாற்ற யேசுசபைகுருவான புனித சவேரியார் வந்தார். மிகப்பெரிய நற்செய்திப் பணியாளரான இவரது நற்செய்திப்பணி ஊழியம் வரலாற்றுச்சிறப்புமிக்கது. ஆட்களைத்திரட்ட கைமணியை (Hand Bell) அடித்துக் கொண்டு ஊர்ஊராக சென்று சூறாவளி நற்செய்திப் பணியை மேற்கொண்ட அவர் போதுமான குருமார்கள் இல்லாத குறையை **'அறுப்பு மிகுதி, வேலையாட்களோ குறைவு'** என்ற விவிலிய வாசகத்தை நினைப்பூட்டி சொல்லுவாராம். அவரது வேண்டுகோளின்படி தமிழ்நாட்டிற்கு அனுப்பப்பட்ட குருமார்களில் ஒருவர்தான் சங்கை ஹென்றிக்கு ஹென்றிக்கஸ் சுவாமியார் ஆவார்.

## கார்ட்டிலா என்ற புத்தகம் :

தமிழின் ஒலிவடிவை போர்ச்சுக்கீசிய வரிவடிவில் எழுதி கி.பி.1554ல் போர்ச்சுக்கல் தலைநகரான லிஸ்பனில் அச்சிட்ட நூல் இது. தமிழ் ஒலிவடிவம் கருமை நிறத்திலும், போர்ச்சுக்கீசிய சொல் செந்நிறத்திலும் அமைந்திருந்தது. இது குருமார்களின் பயன்பாட்டிற்காக எழுதப்பட்டது. தமிழ் ஜெபங்களை தமிழ் உச்சரிப்பில் போர்ச்சுக்கீசிய வரிவடிவத்தில் எழுதி அவை போர்ச்சுக்கீசிய குருமார்கள் தமிழர்களுக்கு போதிக்க கையேடுபோல இருந்தது.

## தம்பிரான் வணக்கம் என்ற முழுமையான தமிழ் நூல்:

தமிழ்மொழியின் முதல் அச்சுப் புத்தகம் இதுவே. (The First Printed Tamil Book ) கேரள மாநிலம் கொல்லத்தில் கி.பி. 1578ல் இந்த நூலை சங்கை H. ஹென்றிக்கஸ் சுவாமியார் அச்சேற்றினார். இந்த நூலை புனித பிரான்சிஸ் சேவியர் எழுதினார். அதன் தமிழ் மொழிபெயர்ப்பை சங்கை H.

ஹென்றிக்கஸ் சுவாமியார் கனம் பீட்டர் மானுவேல் என்ற இந்திய குருவுடன் இணைந்து செய்திருந்தார். கி. பி. 1579ல் சங்கை H. ஹென்றிக்கஸ் சுவாமியாரின் இரண்டாவது நூலான 'கிரீசித்தியானி வணக்கம்' என்ற புத்தகம் கொச்சியில் அச்சானது.

### புன்னைக்காயல் அச்சகமும் 'அடியார் வரலாறும்':

கிரீசித்தியானி வணக்கம், தம்பிரான் வணக்கம் என்ற இரு நூல்களைத் தொடர்ந்து தமிழில் வெளியானது 'அடியார் வரலாறு' என்ற நூலாகும். மேற்கூறிய இரு நூல்களும் தமிழ்நாட்டு எல்லைக்கு வெளியே அச்சானவை. தமிழ்நாட்டில் உருவான முதல் அச்சகமான புன்னைக் காயல் அச்சகத்தில் கி. பி. 1586ல் அச்சடிக்கப்பட்ட நூல் என்ற பெருமை 'அடியார் வரலாறு' என்ற நூலுக்கே உரியது. இது ஸ்பானிய மொழியில் கிறிஸ்தவப் புனிதர்களின் வரலாற்றைக் கூறும் 'Flos Sanctorum' என்ற நூலின் மொழிபெயர்ப்பாகும். இந்த நூல் அச்சடிக்கப்பட்ட அச்சகம் இன்றைய தூத்துக்குடி மாவட்டத்தில் பொருநை நதி கடலோடு கலக்கும் இடத்திலுள்ள புன்னைக் காயல் என்ற சிறிய ஊரில் உருவானது. இந்த புன்னைக் காயலில் தங்கியிருந்த சங்கை H . ஹென்றிக்கஸ் சுவாமியார் இந்த அச்சகத்தை உருவாக்கி தனது நூல்களையும், மற்ற யேசுசபை வெளியீடுகளையும் அச்சேற்றினார். இந்த அச்சகம் உருவாக்கம் பெறுவதற்கு முத்துக்குளித்துறை பரதவர்கள் நிதி உதவி செய்திருக்கிறார்கள். சங்கை ஹென்றிக்கு ஹென்றிக்கஸ் சுவாமியாரை (Rev. Fr. Henrique Henriquez) தமிழ்மொழியின் அச்சுத் தந்தை என அழைப்பது சரியானதும் பொருத்தமானதுமாகும்.

### சேலநாட்டில் சேசுசபை (Society of Jesus) குருக்கள் :

கி.பி. 1595 ஆம் ஆண்டு கடற்கரைப்பட்டணங்களிலேயே நற்செய்திப் பணிகளையும், சமயப் பணிகளையும், செய்துவந்த யேசுசபை குருமார்கள் முதன்முறையாக உள்நாட்டுப் பகுதிகளுக்கு வந்தனர். இதற்கு முக்கிய காரணம் நாயக்க மன்னர்களோடும், அவர்களின் அரசப்பிரதிநிதிகளோடும், அரசியல் தொடர்பு வைத்துக் கொள்ள உள்நாட்டிற்கு வந்தனர். மதுரையிலும், அதன் சுற்றுப்புறங்களிலும், வியாபார நிமித்தமாக வந்த போர்ச்சுக்கீசியர்கள், இந்தோ- போர்ச்சுக்கீசியர்கள், மற்றும் பரத கத்தோலிக்கர்கள், ஆகியோர்களை மதுரைக்கு அனுப்பப்பட்ட முதல் யேசுசபை குருவான சங்கை பெர்னான்டஸ் சுவாமியார் விசாரித்துவந்தார். அவர் மதுரையில் ஒரு பள்ளிக்கூடமும், மருத்துவ மனையையும் நடத்திவந்தார். இவருக்கு உதவியாக கி. பி. 1606 ஆம் ஆண்டு உதவி குருவாக சங்கை இராபர்ட் டீ நொபிலி சுவாமியார் அனுப்பப்பட்டார். கிறிஸ்தவம் உள்நாட்டுப் பகுதிகளில் பரவ நொபிலி சுவாமியார் மூலகாரணமாக இருந்தார். சமஸ்கிருதத்தை முதன் முதலில் கற்றறிந்த ஐரோப்பியர் நொபிலி சுவாமியார்தான். அதுமட்டுமல்லாது நான்கு சமஸ்கிருத வேதங்களையும், புராணங்களையும் கற்றுத் தேர்ந்தார். புகழ்பெற்ற மதுரை மிஷன் பணித்தளம் உருவாக்கம் பெற்றதே சங்கை நொபிலி சுவாமியார் அவர்களால்தான் என்று 'திருநெல்வேலிக்கு கிறிஸ்தவம் வந்தது' என்ற நூலை எழுதிய திரு. டேவிட் பாக்கியமுத்து கருதுகிறார்.

இந்த சமயத்தில்தான் நொபிலி சுவாமியாரால் மீட்பிற்குள் அழைக்கப்பட்ட அவரது சிறுமந்தையைச் சார்ந்த ஒரு கூட்டத்தினர் மதுரையிலிருந்து திருச்சிராப்பள்ளி நாயக்கர் அரண்மனைக்கு வந்தனர். இவர்களைச் சந்திக்க திருச்சிராப்பள்ளிக்கு நொபிலி சுவாமியார் போகும் நிலை ஏற்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில்தான் தாம் நெடுநாட்களாகக் நினைத்துக் கொண்டிருந்த தமிழ்நாட்டின் தூரமான உட்பகுதிகளுக்கு கிறிஸ்துவின் நற்செய்தியை போதிக்கும் திட்டத்தை அமுலுக்கு கொண்டுவர முடிவு செய்தார். முதலில் மானா மதுரையிலும், பின்பு தஞ்சாவூரிலும், அதன்பின்பு திருச்சிராப்பள்ளியிலும் தனது திட்டத்தைத் துவக்கினார். ஆனால் அந்த நேரத்தில் திருச்சிராப்பள்ளி பகுதிகள் தஞ்சை நாயக்க மன்னருக்கு எதிராக போருக்கான தயாரிப்புகளை மேற்கொண்டிருந்ததால் சந்தர்ப்பம் சரியில்லை என்று தீர்மானித்து நொபிலி சுவாமியார் சேலநாட்டிற்குச் செல்லப் புறப்பட்டார்.

### சேலத்தில் சங்கை. நொபிலி சுவாமியார்:

கி. பி. 1623 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நொபிலி சுவாமியார் காவிரி கொள்ளிடத்தைக் கடந்து, பாச்சூர், தொட்டியம், காரைப் பொட்டனாறு வழியாக சேந்தமங்கலம் வந்தார். அங்கு சேந்தமங்கலம் இராமச் சந்திர நாயக்கரை தனது நான்கு அந்தண சீடர்களுடனும், உபதேசிமார்களுடனும், நொபிலி சுவாமியார் சந்தித்தார். இராமச்சந்திர நாயக்கர் சுவாமியாரை வரவேற்று உபசரித்தார். நொபிலி சுவாமியாருக்கு நிலமும், வீடும், நாட்டு மக்களிடம் வேத பிரசங்கங்கள் செய்ய அனுமதியும் அளித்தார். ஆனால் ஏனோ இவற்றையெல்லாம் ஏற்க மறுத்துவிட்டு சுவாமியார் சேலம் நோக்கிய தனது நெடும் பயணத்தைத் தொடர்ந்தார். அந்த நாட்களில் தலைக்காடு என அழைக்கப்பட்ட சேலம் பகுதிகளில் மதுரை நாயக்கருக்கு கட்டுப்பட்ட பாளையக்காரர்கள் இருந்தனர். அப்பொழுது சேலபதி நாயக்கரின் சேலநாட்டுப் பிரதேச ஆட்சி வடமேற்கில் ஏத்தாப்பூரிலிருந்து தென்கரைக் கோட்டைவரை நெடுக பரவியிருந்தது. தெற்கில் நாமக்கல், சேந்தமங்கலம் நாயக்கர்கள் இருந்தனர்.

### சேலம் நகர வீதிகளில் சங்கை நொபிலி சுவாமியாரின் வீர பிரசங்கங்கள் :

பல்வேறு தடைகளையும், எதிர்ப்புகளையும் கடந்து சேலம் நகர் வந்த சுவாமியார் 1623 ஆம் ஆண்டு வருகையின் காலத்தில் அன்றைய சேலம் நகரின் வீதிகளில் இயேசுவின் பெயரை முதன்முதலாக அறிவித்து பிரசங்கங்கள் செய்தார்.

1624 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒரு கிழச் சிப்பாயும், சாகும் தறுவாயிலிருந்த ஒரு வள்ளுவப் பண்டாரமும் ஞானஸ்நானம் பெற்றனர். மெத்த படித்த பண்டாரம் ஒருவர் 'முத்திஉதயன்' என்ற பெயரில் ஞானஸ்நானம் பெற்றார். இவர்கள்தான் சேலத்தின் முதல் கிறிஸ்தவர்கள். இப்படித்தான் 400 ஆண்டுகளுக்கு முன்பு சேலத்திற்கு கிறிஸ்தவம் வந்தது.

# கொடைக்கானல் பாக்கியபுரம்




**தேவராஜ் அதிசயராஜ்**
மதுரை

இன்றைய தூத்துக்குடி மாவட்டம் மெய்ஞானபுரம் அருகே உள்ள ஒரு கிராமம் செம்மறிக்குளம். இக்கிராம மக்களின் முக்கியத் தொழில் பனை ஏறுதல் ஆகும். இவ் ஊரில் ஒரு நடுத்தர குடும்பம் இருந்தது இவர்கள் உழைப்பை நம்பி வாழ்ந்தார்கள்.

இவ் வீட்டுப் பிள்ளைகள் மெய்ஞானபுரம் மிஷன் பள்ளியில் படித்தார்கள். அவர்களில் ஒருவர் அங்கே போதிக்கப்பட்ட இயேசுவின் போதனைகளில் தம் மனதை பறி கொடுத்தார். இயேசுவை தன்னுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார். ஞானக்கண் என்ற பெயரில் ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டார். குடும்பத்தார் எதிர்ப்பு தெரிவிக்கவே, மதுரை பசுமலைக்கு ஞானமுத்து வந்தார். இங்கே இருந்த அமெரிக்கன் மிஷனெரிகளிடம் வேலை செய்தார். பிள்ளைகளைப் படிக்க வைத்தார் அவர்களில் ஒரு குமாரர் ஞானமுத்து பாக்கியநாதன். தன் சிறுவயது முதலே நல்லொழுக்கத்திலும் தெய்வபக்தியிலும் வளர்ந்தார். இவர் பசுமலையில் 1881 இல் தொடங்கப்பட்ட மதுரை சுதேச கல்லூரி மாணவராக மெட்ரிகுலேஷன் தேர்ச்சி பெற்றார். (இக் கல்லூரி பின்னர் அமெரிக்கன் கல்லூரியாக மலர்ந்தது குறிப்பிடத்தக்கது.)

மெட்ரிகுலேஷன் தேர்ச்சி பெற்ற ஞானமுத்து பாக்கியநாதனுக்கு துணை கலெக்டர் வேலைக்கான நியமன ஆணை வந்தது. ஆனால் இவரோ அரசு வேலையை விட்டு விட்டு கிறிஸ்துவுக்காக பணி செய்ய தன்னை ஒப்புக் கொடுத்தார். அவரது தகப்பனாருக்கு இது மிகுந்த மகிழ்ச்சியை கொடுத்தது. அதன்படி, 1889 இல் குருவானவராக அபிஷேகம் செய்யப்பட்டு தன்னுடைய வாழ்நாள் முழுவதும் கொடைக்கானல் சபையில் போதகராக ஊழியம் செய்தார். பசுமலை தந்தை என்று



அருள்திரு.பாக்கியநாதன்

போற்றப்படும் வில்லியம் டிரேசியின் அன்பான குமாரர் அருட்திரு. ஜேம்ஸ் எட்வர்ட் டிரேசி (James Edward Tracy) தமது துணைவியார் பிரான்சிஸ் சபின் டிரேசியுடன் (Frances Sabin Tracy) கொடைக்கானலில் மிஷனெரியாக பணி செய்து வந்தார். (இவரது பெயரில் தான் பெரியகுளம் தேவாலயம் அமைந்துள்ளது.)

J. E. டிரேசியின் கொடைக்கானல் ஊழியம் என்றும் மறக்க முடியாதது. ஆதிவாசிகள் மத்தியில் இவர் செய்த ஊழியத்தின் பலனாக ஏராளமானவர்கள் திருச்சபையில் சேர்ந்தார்கள். கொடைக்கானல் மலையில் இவர் காலடி படாத இடம் இல்லை என்று கூறப்படுகிறது. இந்நாட்களிலே இவருக்கு உதவியாக பாக்கியநாதன் ஐயர் ஊழியம் செய்து வந்தார்.

கொடைக்கானல் திருச்சபையில் அந்நாட்களில் மேலைநாட்டவர்களிடம் வேலை பார்ப்பவர்களை அதிகம் இருந்தனர். இவர்கள் ஏழைகளாகவும் வசதி குறைந்தவர்களாகவும் இருந்தனர். ஆதிவாசிகள் சிலரும் இருந்தனர். இவர்களை சந்திப்பதற்காக பாக்கியநாதன் ஐயர் வீடு சந்திப்பு செய்யும் போது சரியான ரோடு வசதி இல்லாது இருந்தது. மேடு பள்ளம் ஏறி இறங்கி செல்ல வேண்டியது இருந்தது. ஆயினும் எல்லா இடங்களுக்கும் நடந்து சென்று மக்களை சந்தித்து ஊழியம் செய்து வந்தார். திருச்சபையார் வீட்டில் நடைபெறும் விசேஷங்களில் கலந்து கொள்ளும்போது ஐயர் அவர்களுக்கு விருப்பமில்லாத சில அசைவ உணவுகள் பரிமாறப்படுவது உண்டு. அவை சுகாதாரமாக இருப்பதில்லை. ஆயினும் சபை மக்கள் மீது கொண்டுள்ள அன்பால் ஐயர் அவர்கள் அவற்றை தட்டிக் கழிக்காது ஏற்றுக் கொள்வார்.

கொடைக்கானல் அடர்ந்த காடுகள் நிறைந்ததாக காணப்பட்டது. காடுகளில் கொடிய விலங்குகளும் விஷம் நிறைந்த பாம்புகளும் சர்வ சாதாரணமாக நடமாடின. ஐயர் அவர்கள் கிராம ஊழியங்களுக்கு செல்லும்போது இக்காடுகளை கடந்தே செல்ல வேண்டியது இருந்தது. அப்போதெல்லாம் தம்மோடு கோயில் குட்டியாரையும் அழைத்துச் செல்வது வழக்கம். ஒருமுறை இருவரும் காட்டுக்குள்ளே ஒற்றையடி பாதையில் நடந்து சென்ற போது திடீரென செடிகள் அசைந்தன. அங்கே எட்டிப் பார்த்தபோது ஒரு புலி உறுமிக் கொண்டு இவர்களை நோக்கி வந்தது. இருவரும் சென்ற மலை பாதையில் மறித்து நின்றது. காட்டுப் புலியை நேருக்கு நேர் பார்த்து விட்டால் எப்படி இருக்கும்? இரண்டு பேருமே நடுங்கினார்கள். கோயில் குட்டியார், 'ஓடிவிடலாமா' என்று ஆலோசனை கூறினார். புலியிடமிருந்து ஓடி தப்பிக்க முடியுமா ? எனவே இந்த யோசனைக்கு ஐயரவர்கள் உடன்படவில்லை.

மரணம் சம்பவிப்பது உறுதி என்று நம்பியபடி ஐயர் அவர்கள் அதே இடத்தில் முழங்கால் படியிட்டார்கள். வேதாகமத்தை உயர்த்திப் பிடித்தபடி தானியலின் தேவனை நோக்கி ஜெபித்தார். பிதாவின் கரங்களில் தன்னை ஒப்புக்கொடுத்தார். சற்று நேரம் கழித்து கண்களை விழித்துப் பார்த்தால் என்ன ஆச்சரியம்? அங்கே புலி இல்லை அது பாதையை கடந்து வேறு பக்கமாக போய்விட்டது. இருவருக்கும் எந்த வித சேதமும் செய்யவில்லை. மிகுந்த மகிழ்ச்சியோடு ஊழியம் செய்து விட்டு வீடு திரும்பினார்கள்.

இச்ச சம்பவத்தை ஐயர் அவர்கள் தமது குடும்பத்தாரோடு பகிர்ந்து கொண்டார்கள். அது முதல் பேரப் பிள்ளைகள் யாவரும் 'புலி தாத்தா' என்றே ஐயர் அவர்களை அழைக்க ஆரம்பித்தார்கள் இது போன்ற பல அதிசயங்களும் அற்புதங்களும் புலி தாத்தா வாழ்வில் நடந்தது உண்டு ஐயர் கொடைக்கானல் மலை எங்கும் சுற்றி திரிந்து ஊழியம் செய்தார்கள் கொடைக்கானல் பகுதியில் பல கிராம சபைகள் உருவாக ஐயர் அவர்கள் காரணமாக இருந்தார் .

இவரது தன்னலமற்ற ஊழியத்தை நினைப்பூட்டும் வகையில் கொடைக்கானலில் பாக்கியபுரம் எனும் குடியிருப்பு இவர் பெயரில் அமைந்துள்ளது. ஊழியத்தின் பாதையில் வளர்ச்சி பெற்ற ஐயர் வாழ்வில் வறுமை தான் தாண்டவம் ஆடியது. ஐயருக்கு 10 பிள்ளைகள். ஐந்து ஆண் மக்கள் 5 பெண் மக்கள். கடைசி பெண் சிறு வயதில் மதித்து விட்டால் எனவே 9 பிள்ளைகள். அனேக நாட்கள் இவர்களுக்கு அரை வயிறு நிரம்பும் படிதான் உணவு கிடைத்தது. சில நாட்கள் பட்டினி கிடக்க நேர்ந்தது. ஆண் மக்கள் எந்த வேலையையும் இழிவாக கருதாதபடி வளர்க்கப்பட்டார்கள். கொடைக்கானலுக்கு வரும் மேலை நாட்டவர்கள் டென்னிஸ், கோல்ப் போன்ற விளையாட்டுகள் விளையாடி மகிழ்வது வழக்கம். அப்போது பந்துகளை எடுத்துக் கொடுத்து உதவுவது, வெள்ளைக்காரர்களுக்கு தமிழ் கற்றுக் கொடுத்து உதவுவது, மொழிபெயர்ப்பாளராக இருந்து பணி செய்வது ஆகியவை மூலம் ஆண் பிள்ளைகள் ஊதியம் பெற்றார்கள்.

தமது பிள்ளைகளை படிக்க வைக்க மிகவும் கஷ்டப்பட்டார். கொடைக்கானலில் உயர் கல்வி கற்க வாய்ப்பு இல்லாது இருந்தது. எனவே நமது பிள்ளைகளை அழைத்துக் கொண்டு சில சமயம் அவர்களை தோளில் தூக்கி வைத்துக்கொண்டு அவர்களின் துணிப்பையை தூக்கிக் கொண்டு அடர்ந்த காடுகளின் வழியே சென்று ரோட்டுக்கு போய் பஸ் ஏற்றிவிட்டு திரும்புவார். அவர்கள் படிக்கும் போது அடிக்கடி அவர்களுக்கு கடிதம் எழுதி கல்வியின் அவசியத்தை உணர்த்தினார். குடும்ப கஷ்டத்தை தெரியப்படுத்தி உழைத்து முன்னேற அறிவுரை கூறினார். மாதந்தோறும் கொஞ்ச பணம் அனுப்பி அதில் சிக்கனமாக வாழவும் கற்றுக் கொடுத்தார். பாக்கியநாதன் ஐயரின் பிள்ளைகள் யாவரும் குடும்ப கஷ்டம் உணர்ந்து கடவுளை நம்பி வாழ்ந்தார்கள்.

ஐயர் அவர்கள் கொடைக்கானலில் ஒரு பழைய வீட்டில் குடியிருந்தார். அது ஒரு சிறிய வீடாக இருந்தது. போதிய வசதி இல்லை. ஒன்பது பிள்ளைகளோடு அந்த வீட்டில் குடியிருக்க மிக கஷ்டமாக இருந்தது வீட்டிலே ஒரு பரண் இருந்தது. அதில் தான் யாவரும் படுத்து தூங்குவார்கள். தெள்ளு பூச்சி தொந்தரவு அதிகம் இருந்தது. அய்யர் அவர்கள் எப்போதும் ஒரு குடையுடன் தான் எங்கும் தெரிவார். சபைகளின் வீடுகளை ஒழுங்காக சந்திப்பார். முன்மாதிரியான ஜீவியம் செய்து வந்தார்.

ஐயர் அவர்கள் சரியான உணவின்றி போதிய உறக்கமின்றி சபை வளர்ச்சிக்காகவும் பிள்ளைகளின் உயர்வுக்காகவும் பாடுபட்டு உழைத்தார். ஓய்வின்றி உழைத்தமையால் மிகக் குறுகிய காலத்தில் அதாவது தமது 40 வயதை எட்டிய நிலையில் 1910 ஜூன் 18 இல் மரணம் அடைந்தார். இவரது மரணம் கொடைக்கானல் திருச்சபைக்கு பேரிழப்பு என்பதில் ஐயமில்லை. இவரது சரீரம் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையோடு கொடைக்கானலில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஐயர் அவர்கள் கட்டிய ஆலயத்தில் இவர் நினைவாக ஒரு நினைவுக் கல் வைக்கப்பட்டுள்ளது. இவரது ஐந்து ஆண் மக்களான ஜி. பி . ஜேம்ஸ், ஜி . பி. ஜார்ஜ் , ஜி. பி. தாமஸ், ஜி. பி . வில்லியம், ஜி. பி. சார்லஸ் ஆகிய ஐந்து பேருமே குரு வானவர்களாக கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிவசைலனூர் திருச்சபை வரலாறு

ஜா.ஜான் ஞானராஜ்
திருநெல்வேலி




சிவசைலனூர் தூய.இம்மானுவேல் ஆலயம்

தென்காசி மாவட்டம் தென்காசி தாலுகாவில் பாவூர்சத்திரத்திற்கும், கடையத்திற்கும் இடையே உள்ள சாலையில் ஆவுடையானூர் அரியப்பபுரம் ஆகிய இரு பெருங்கிராமங்களுக்கு மத்தியில் சிவசைலனூர் கிராமம் உள்ளது. மாவட்ட தலைநகரமான தென்காசியில் இருந்து கீழ்ப்புறம் சுமார் 15 கிலோ மீட்டர் தொலைவில் இக்கிராமம் உள்ளது.

## அறிமுகம்

நெல்லை அப்போஸ்தலர் ரேனியஸ் ஐயரவர்கள் அக்காலத்து ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டத்தில் (தற்போதைய திருநெல்வேலி தூத்துக்குடி தென்காசி விருதுநகர் மாவட்டங்கள்) நற்செய்திப் பணி செய்த 1820 - 1838 காலகட்டத்திற்கு முன்பாகவே அமைப்பு ரீதியாகவும் சிறப்புக்குரியதாகவும் உள்ளது. சிவசைலனூரின் பாரம்பரிய செவிவழிச் செய்திகள் மற்றும் தொடக்க கால குடும்பங்களின் தலைமுறைகள் ஆகியவற்றை அடிப்படையாக எடுத்துக் கொள்கிறபோது நவாப் ஆட்சிக் காலத்தில் (1736-1791, 1801) இக்கிராமம் உருவாகியிருக்க வேண்டும் என்பதை அறிய முடிகிறது.

## மக்களும் சமூகமும்

சிவசைலனூர் கிராமத்தில் நாடார் சமூகத்தைச் சார்ந்தவர்களே வசித்து வருகிறார்கள். நாடார் சமூகத்தைச் சார்ந்த காக்கும் பெருமாள் கூட்டம் மற்றும் சீவலப்பேரியான் கூட்டம் எனும் இரு பெரும் குடும்பத்தைச் சார்ந்த சுமார் 100 + 100 = 200 குடும்பத்தினர் இக்கிராமத்தில் வசிக்கின்றனர். இக்கிராமம் உருவான காலத்திலேயே இவ்விரு குடும்பத்தினரும் ஒருவருக்கொருவர் திருமண உறவுகளைக் கொண்டு மாமன் மச்சினன் உறவு முறைகளை இன்றளவும் பேணி வருகின்றனர். இக்கிராமத்தில் இவ்விரு குடும்பத்தாருக்குள்ளே அநேக திருமண சம்பந்தங்கள் இன்றளவும் தொடர்ந்து நடைபெறுகிறது. இவ்விரு குடும்பத்தாருக்கும் இடையே பெரிய அளவில் குடும்ப மோதல்கள் இக்கிராமத்தில் இல்லை.

## சிவசைலனூர் பெயர் காரணம் குறித்து நான்கு காரணங்கள் சொல்லப்படுகிறது

1. காக்கும் பெருமாள் சாஸ்தாவை வழிபட்டு வந்த காக்கும் பெருமாள் கூட்டம் குடும்பத்தினர் இந்த கிராமத்தில் குடியேறுவதற்கு முன்பு ஏரல் குரும்பூர் பகுதியில் இருந்து வெளியேறி ஏர்வாடி வழியாக வந்து ஆழ்வார்குறிச்சி அருகில் உள்ள சிவசைலம் என்ற கிராமத்தில் முதலில் தங்கி இருந்ததாகவும் பின்னர் அங்கிருந்து இடப்பெயர்ச்சி செய்து தற்போது சிவசைலனூர் கிராமம் இருக்கும் இடத்தில் குடியேறியதாகவும் அதன் காரணமாக

இப்பெயர் ஏற்பட்டதாக சொல்லப்படுகிறது.

2. சீவலப்பேரியிலிருந்து வெளியேறி இலட்சுமிபுரம் வந்து அங்கு தங்கி இருந்து பின்னர் தற்போது சிவசைலனூர் இருக்கும் இடத்தில் குடியேறிய சீவலப்பேரியான் குடும்பத்தின் முதல் இரு பெயர்களான சீவ என்பதை முன்வைத்து இப்பெயர் கிராமத்திற்கு வந்திருக்கலாம் என கூறப்படுகிறது.
3. இக்கிராமத்தின் தொடக்க கால பெரியவர்களின் பெயர்கள் சிவ என்ற இரு எழுத்துக்களில் தொடங்குவதாக இருந்தது என்றும் அதனால் இப்பெயர் ஏற்பட்டதாக சொல்லப்படுகிறது.
4. இக்கிராமத்தின் தொடக்க கால பெரியவர்களில் ஒருவரது பெயர் சிவசைலநாடார் என்றும் அதன்காரணமாக இப்பெயர் வந்ததாகவும் சொல்லப்படுகிறது.

## சிவசைலனூரில் கிறிஸ்தவம்

1820 முதல் நெல்லை அப்போஸ்தலர் ரேனியஸ் ஐயரவர்களின் தலைமையில் உபதேசிமார்கள் மற்றும் செமினரி மாணவர்கள் இணைந்து அக்கால ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டம் எங்கும் சீர்திருத்த பிராட்டஸ்டண்ட் கிறிஸ்தவ நற்செய்தி அறிவிக்கப்பட்டு வந்தது. 1825 முதல் கடையம் மற்றும் பாவூர்சத்திரம் வட்டாரக் கிராமங்கள் எங்கும் நெல்லை அப்போஸ்தலர் ரேனியஸ் ஐயரவர்கள் நற்செய்தி அறிவிப்புப் பணியை தீவிரப்படுத்தினார்கள். சிவசைலனூர் அருகில் உள்ள கிராமங்களில் 1825 இல் கணபதிநாடானூர். 1827 இல் புலவனூர், 1828 இல் மேட்டூர், 1829 இல் பொடியனூர், ஆகிய கிராமத்தார் கிறிஸ்தவத்தை ஏற்றனர் அனைத்து ஊர்களிலும் சபை நிறுவப்பட்டது.

1833 இல் சிவசைலனூர் கிராமத்தார் கிறிஸ்தவத்தை ஏற்றனர். 1833 இல் சிவசைலனூரில் சபை உருவானது. காக்கும் பெருமாள் கூட்டம் மற்றும் சீவலப்பேரியான் கூட்டம் ஆகிய இரு பெருங்குடும்பங்களும் படிப்படியாக ஒட்டுமொத்தமாக கிறிஸ்தவத்தை ஏற்றார்கள். சிவசைலனூருக்குப் பின்னர் 1834 இல் ஆவுடையநாடானூர் எனும் ஆவுடையானூர் கிராமத்தினர் கிறிஸ்தவத்தை ஏற்றனர். அதன் மூலமாக சபை உருவானது.

## சிவசைலனூரில் CMS திருச்சபை

CMS மிஷன் ரிப்போர்ட் எனும் CMR இல் 1833 இல் சிவசைலனூரில் அநேக குடும்பத்தார் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டதையும் CMS திருச்சபை 1833 இல் சிவசைலனூரில் உருவானதையும் ரேனியஸ் குறிப்பிடுகிறார். அதே நேரத்தில் புதிதாக கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கு சிவசைலனூரில் துன்பங்கள் ஏற்பட்டதையும், அந்த துன்பத்தின் மத்தியிலும் சிவசைலனூர் திருச்சபையார் கிறிஸ்துவுக்குள் உறுதியாக நிலைத்திருந்ததையும் குறிப்பிட்டுள்ள ரேனியஸ் உறுதியாக நிலைத்திருந்த அநேகரில் இருவரது பெயரையும் குறிப்பிடுகிறார். அதில் ஒருவர் மையாண்டி எனும் மாயாண்டி மற்றொருவர் மாடன் இவ்விருவரோடு இன்னும் அநேகர் உறுதியோடு துன்பத்தில் பொறுமையாய் இருந்து விசுவாசத்தை காத்துக் கொண்டனர் எனவும் ரேனியஸ் குறிப்பிடுகிறார். மாயாண்டி என்பதையே அவர் மையாண்டி என ஆங்கிலத்தில் எழுதியிருக்க வேண்டும் என்பதை புரிந்து கொள்ள முடிகிறது. சிவசைலனூர் மாயாண்டிக்கு ஞானமுத்து என்ற பெயரில் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதையும் ரேனியஸ் குறிப்பிடுகிறார்.

## சிவசைலனூர் திருச்சபையில் ஏற்பட்ட முதலாவது பிளவும் பின்மாற்றமும்

நெல்லை அப்போஸ்தலர் ரேனியஸ் ஐயரவர்களின் நற்செய்திப் பணியால் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்ட சிவசைலனூர் கிராமம் சில ஆண்டுகளுக்குள் முழு கிறிஸ்தவ கிராமமாக மாறியது. தங்களது பழங்கால குலதெய்வ வழிபாடுகளை சிவசைலனூரின் இரு பெருங்குடும்பத்தினரும் மறந்து போகும் அளவிற்கு அக்கால நிலை இருந்தது. காக்கும் பெருமாள் கூட்டம் குடும்பத்தாருக்கு இடையே இட நெருக்கடி மற்றும் கருத்து வேறுபாடுகள் காரணமாக பிரச்சனைகள் உருவானபோது கிறிஸ்தவத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டிருந்த காக்கும் பெருமாள் கூட்டம் குடும்பத்தினர் சிவசைலனூரை விட்டு வெளியேற ஆரம்பித்தனர். அவ்வாறு வெளியேறியவர்கள் தாங்கள் குடியேறிய இடத்தில் கிறிஸ்தவத்தை விட்டு விலகி இந்து மதத்தை தழுவிக் கொண்டனர். காக்கும் பெருமாள் கூட்டம் குடும்பத்தினரின் வழி மரபில் வந்த சோமன் கூட்டம் என்று அழைக்கப்பட்ட குடும்பத்தினர் சிவசைலனூரை ஒட்டி பொடியனூர் செல்லும் பாதையில் குடியேறி தாங்கள் குடியேறிய இடத்திற்கு சிவசுப்பிரமணியபுரம் என பெயர் வைத்து கிறிஸ்தவர் அல்லாத இந்து பெண்களை திருமணம் செய்து இந்துக்களாயினர். அந்தப் பகுதியில் இருந்த கோவில்களை தங்களது வழிபாட்டிடங்களாக ஏற்றுக்கொண்டு முழுமையாக கிறிஸ்தவத்தை விட்டு விலகினர். இவ்வாறு வெளியேறி சிவசுப்பிரமணியபுரத்தில் வசிப்பவர்கள் தற்போது சுமார் 50 குடும்பத்தினர் உள்ளனர்.

இதே காலகட்டத்தில் காக்கும் பெருமாள் கூட்டம் குடும்பத்தினரின் வழி மரபில் வந்த வினைதீர்த்த நாடார் கூட்டம் குடும்பத்தினர் சிவசைலனூரை அடுத்து சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவில் தென் கீழ் புறம் உள்ள வெய்க்காலிப்பட்டி கிராமத்தின் ஒரு பகுதியில் குடியேறினர். அப்பகுதிக்கு வினை தீர்த்த நாடார்பட்டி என்ற பெயரையும் சூட்டி கொண்டனர். அந்தப் பகுதியில் இருந்த இந்துக்களோடு திருமண உறவுகளை மேற்கொண்டு கிறிஸ்தவத்தை விட்டு வெளியேறி இந்துக்களானார்கள். தற்போது சுமார் 20 குடும்பத்தினர் வினை தீர்த்த நாடார் பட்டியில் வசிக்கின்றனர்.

## நல்லூர் துன்பம் எனும் மேல்நெல்லை துன்பம் (1845 – 1846)

கிறிஸ்தவ எதிர்ப்பு உச்ச கட்டத்தில் இருந்த காலகட்டமான நல்லூர் துன்பம் என்றழைக்கப்படும் மேல்நெல்லை துன்பம் ஏற்பட்ட 1845 -1846 காலகட்டத்தில் சிவசைலனூர் திருச்சபையில்

முதலாவது பிளவும் பின்மாற்றமும் ஏற்பட்டிருக்கலாம். இந்த துன்ப காலத்தில் மேல் நெல்லை வட்டார கிராமங்களின் சபைகள் பின்மாற்றம் அடைந்து சபையார் இந்துக்களாக மாறினர். கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்ட இந்த துன்பத்திற்கு முழு காரணமாக இருந்தவர் ஆவுடையானூரைச் சார்ந்த அழகப்பன் நாடார் ஆவார். இந்த மேல்நெல்லை துன்பத்தால் முழு கிறிஸ்தவ கிராமமாக இருந்த புலவனூர் எனும் தலைமை சபையில் மூன்றில் இரண்டு பங்கினர் இந்துக்களாயினர். மற்றொரு தலைமை சபையான கோவிலூத்தில் பெரும்பான்மையாக இருந்த கிறிஸ்தவர்கள் படிப்படியாக பின்வாங்கியதால் சபை நலிவடைந்தது கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாக இருந்த மயிலப்பபுரம் திருச்சபையில் பின்மாற்றத்தால் கிறிஸ்தவர்கள் சிறுபான்மையினராயினர். கிறிஸ்தவர்களை பெரும்பான்மையாகக் கொண்டிருந்த கொண்டலூர், கரிசலூர் போன்ற கிராமங்களில் சபையே இல்லாமல் போனது. கணபதி நாடானூர் என்ற விசுவாசபுரம் சபையில் சபையார் நாகல்குளம், மேலப்பட்டமடையார்புரம் குறும்பலாப்பேரி போன்ற கிராமங்களுக்கு இடப்பெயர்ச்சி செய்தனர். சரி பாதி கிறிஸ்தவர்கள் இருந்த ஆவுடையானூரில் ஏராளமான கிறிஸ்தவ குடும்பங்கள் அழகப்ப நாடார் தலைமையில் உருவான இந்த துன்பத்தால் பின்வாங்கியதால் சபை சின்ன சபையாக மாறியது.

## சிவசைலனூர் திருச்சபையில் ஏற்பட்ட இரணாடாவது பிளவும் பின்மாற்றமும்

கிறிஸ்தவத்தை முழுமையாக ஏற்று சிவசைலனூரில் வசித்து வந்த காக்கும் பெருமாள் கூட்டம் குடும்பத்தாரிடம் சில தலைமுறைகளாக ஒற்றுமை இருந்து வந்தது. இந்த நிலையில் மீண்டும் அவர்களுக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் காக்கும் பெருமாள் கூட்டத்தில் ஒரு கோத்திரத்தில் நான்கு சகோதரர்களில் முதல் இருவரான யாக்கோபு நாடார் (பெரிய பொன்னு) மற்றும் சின்னப்பொன்னுநாடார் ஆகியோர் சிவசைலனூரை விட்டு வெளியேறி ஆவுடையானூரில் குடியேறினர். ஆவுடையானூரில் சுரண்டையர் கூட்டம் குடும்பத்துப் பெண்ணை யாக்கோபு நாடார் என்ற பெரிய பொன்னு திருமணம் செய்தார். அவருடைய தம்பி சின்னப் பொன்னு ஆவுடையானூரின் ஆவுடையாநாடான் கூட்டம் குடும்பத்துப் பெண்ணைத் திருமணம் செய்தார். இருவரும் இந்துக்கள் ஆனார்கள். சின்னபொன்னுக்கு குழந்தைகள் இல்லை. சிவசைலனூரிலேயே தொடர்ந்து குடியிருந்த இவர்களது இரு தம்பிகளின் குடும்பங்கள் அருமை நாயகம் நாடார் கூட்டம், யாக்கோபு நாடார் என்ற பெரிய பொன்னுவிற்கு காக்கும் பெருமாள் என்ற மகனும் மூன்று மகள்களும் இருந்தனர். மூன்று மகள்களையும் அரியப்பபுரம் குளத்தூர் அய்யனார் கூட்டம் குடும்பத்தில் திருமணம் செய்து கொடுத்தார். காக்கும் பெருமாள் தமது மகள் வள்ளியம்மாளை ஆவுடையாநாடானின் மகனாகிய ஆவுடைசிவனின் வழி மரபில் வந்தவருக்கு திருமணம் செய்து கொடுத்தார். அந்த திருமணத்தின் போது சிவசைலனூரில் தங்களுக்கு இருந்த விவசாய நிலத்தின் ஒரு பகுதியான ஐந்து ஏக்கர் நிலத்தை சீதனமாகக் கொடுத்தார். ஆவுடையானூரில் தாங்கள் வசித்த பகுதிக்கு காக்கும் பெருமாள்பட்டி என பெயர் வைத்துள்ள இவர்களில் சுமார் 15 குடும்பத்தினர் அங்கு வசித்து வருகின்றனர். இவர்கள் இந்துக்களாக மாறி தனியே பிரிந்தபோதும் சிவசைலனூரிலுள்ள தங்களது கிறிஸ்தவ உறவினர்களோடு சிறந்த நல்லுறவைப் பேணி வருகின்றனர்.

## சிவசைலனூர் திருச்சபையில் ஏற்பட்ட மூன்றாவது பிளவு

காக்கும் பெருமாள் கூட்டம் குடும்பத்தில் இருந்தே சிவசைலனூர் சபையின் மூன்றாவது பிளவு தொடங்கியது. நூறு ஆண்டுகளுக்கு முன்பு தமது தாத்தா திரு அ. பொன்னையா நாடார் காலத்தில் இந்த சபைப்பிளவு ஏற்பட்டதாக சிவசைலனூர் சபை பெரியவரும் காக்கும் பெருமாள் கூட்டத்தைச் சார்ந்தவருமான திரு. மா. செல்வின் அவர்கள் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார். 'நூறு ஆண்டுகளுக்கு முன்பு சிவசைலனூரில் வசித்து வந்த காக்கும் பெருமாள் கூட்டம் குடும்பத்தினர் அனைவரும் சேர்ந்து சிவசைலனூர் வேதக்கோவில் தெருவை அடுத்து கிணறு ஒன்றை தோண்டியதாகவும் கிணறு தோண்டுதலில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக தங்களது குடும்பத்தைச் சார்ந்த பத்து குடும்பத்தினர் பிராட்டஸ்டண்ட் சி. எம். எஸ் கிறிஸ்தவத்தை விட்டு விலகி கத்தோலிக்க கிறிஸ்தவத்தில் சேர்ந்தனர். ஆனால் அவர்கள் கத்தோலிக்க கிறிஸ்தவர்களாக மாறியபோதும் தங்களுக்கென கத்தோலிக்க கிறிஸ்தவ தேவாலயத்தை சிவசைலனூரில் கட்டி எழுப்பவில்லை.'

## சிவசைலனூரில் முதல் மற்றும் இரண்டாம் தேவாலயம்

நெல்லை அப்போஸ்தலர் ரேனியஸ் ஐயரவர்களின் நற்செய்திப் பணியால் 1833 இல் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்ட போது சிவசைலனூர் கிராமத்தில் 20 குடும்பத்தினர் வசித்து வந்தார்கள் என்றும் கிறிஸ்தவர்களாக மாறியிருந்த அவர்களனைவரும் இணைந்து தேவாலயம் கட்டுவதற்கு தங்களது சொந்த பனைகளையும், பனை ஓலைகளையும் கொடுத்ததோடு கட்டுமான பணியிலும் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்கள். வெகு விரைவில் பனை ஓலையை மேற்கூறையாகக் கொண்ட தேவாலயத்தை கட்டி முடித்து வழிபாடு செய்து வந்தார்கள். அந்த தேவாலயத்தில் தமது பூட்டனார் அருமைநாயகம் நாடார் பங்கு பெற்று ஆண்டவரை ஆராதனை செய்து வந்தார் என்றும் மேலும் இந்த தேவாலயம் சேகர தலைமையிடமான புலவனூரில் குருவானவர்கள் தங்கி பணி செய்யத் தொடங்கிய காலத்திற்கு முன்பாகவே இந்த முதல் தேவாலயம் கட்டப்பட்டு விட்டது என்றும் முதலில் குளத்து மண்ணைக் கொண்ட சுவர்கள் மூலம் கட்டப்பட்டிருந்த தேவாலயம் பின்னர் சுடு செங்கல் கொண்டு கட்டப்பட்ட தேவாலயமாக மாற்றப்பட்டது என்றும் சிவசைலனூரின் முதல் தேவாலய வரலாறு குறித்து முன்னோர்கள் மூலம் தாம் அறிந்த பாரம்பரிய செவிவழிச் செய்தியை சிவசைலனூர் ஊர் பெரியவர் திரு. மா. செல்வின் அவர்கள் சிவசைலனூர் சபை வரலாறு

குறித்த நேரடி பேட்டியின் போது தெரிவித்தார்கள். சுமார் 75 ஆண்டுகளுக்கு முன்னர் அந்த தேவாலயம் முழுவதுமாக அப்புறப்படுத்தப்பட்டு தற்போது தேவாலயம் அமைந்துள்ள இடத்தில் கிழக்கு நோக்கி முன் வாசல் கொண்டதாக மெயின் தெருவில் ஓடுகளை மேற்கூறையாகக் கொண்ட சுடு செங்கல் சுண்ணாம்பு சாந்து இணைந்த காரைக்கட்டிட தேவாலயம் தூய. இம்மானுவேல் தேவாலயம் என்ற பெயரில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த இரண்டாவது தேவாலயம் சிவசைலனூரில் ஆண்டவருக்கு மகிமையாக 2001 வரை செயல்பட்டு வந்தது.

## இடைக்கால சிவசைலனூர் திருச்சபை

1912 ஆம் ஆண்டிற்கான திருநெல்வேலி திருமண்டல வருமான சுருக்கக் கணக்கு விபரப்படி சிவசைலனூரில் இருந்த ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்கள் 109 பேர், பரி. நற்கருணைக்காரர்கள் ஒன்பது பேர், சிவசைலனூர் சி. எம். எஸ் தொடக்கப்பள்ளியில் கல்வி பயின்ற மாணவர்கள் 26 பேர்.

1930 ஆம் ஆண்டிற்கான திருநெல்வேலி திருமண்டல சுருக்கக் கணக்கு விபரப்படி சிவசைலனூரில் இருந்த ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்கள் 130 பேர், பரி. நற்கருணைக்காரர்கள் முப்பத்தாறு பேர், சிவசைலனூர் சி. எம். எஸ் தொடக்கப்பள்ளியில் கல்வி பயின்ற மாணவர்கள் 40 பேர்.

1956 ஆம் ஆண்டிற்கான திருநெல்வேலி திருமண்டல சுருக்கக் கணக்கு விபரப்படி சிவசைலனூரில் இருந்த ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்கள் 199 பேர், பரி. நற்கருணைக்காரர்கள் 92 பேர், சிவசைலனூர் டி. டி. டி. ஏ. தொடக்கப்பள்ளியில் கல்வி பயின்ற மாணவர்கள் 110 பேர்.

## சிவசைலனூர் திருச்சபையில் தற்காலத்தில் ஏற்பட்ட பிளவு

கடந்த சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் 1995 இல் நடைபெற்ற திருமண்டல தேர்தலில் புலவனூர் சேகரத்தில் சிவசைலனூர் சபை சார்பில் ஏழு பேர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய நிலை வந்தது. இந்த ஏழு பேரையும் சிவசைலனூர் கிராமத்தில் வசிக்கும் காக்கும் பெருமாள் கூட்டம் குடும்பத்தினர் மற்றும் சீவலப்பேரியான் கூட்டம் குடும்பத்தினர் அனைவரும் ஒன்று சேர்ந்து ஊராகக் கூடி ஏழு பேரை ஏகமனதாக தேர்ந்தெடுக்க முடிவு செய்து ஒரு நிபந்தனையையும் தேர்ந்தெடுக்கப்பட உள்ள ஏழு பேருக்கும் வைத்தனர். புலவனூர் சேகர கமிட்டிக்கான செயலாளர், பொருளாளர், கவுன்சில் அங்கத்தினர்கள் மற்றும் துணைக் குழுக்கள் தேர்ந்தெடுக்கப்படுகிற பொழுது சிவசைலனூரில் இருந்து செல்கிற 7 மெம்பர்களும் கடையத்தில் அம்பி என்று அழைக்கப்படும் திரு. ஜெயபாலன் துரைச்சாமி அவர்கள் தலைமையிலான அணியின் பின்னால் இருக்க வேண்டும் மேட்டூரில் மைனர் என்று அழைக்கப்படும் திரு. B. S. இரத்தினம் அவர்கள் தலைமையிலான அணியின் பின்னால் செல்லக் கூடாது என முடிவெடுத்தார்கள். ஆனால், ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட இருந்த ஏழு பேரில் ஒருவரான காக்கும் பெருமாள் கூட்டம் குடும்பத்தின் ஒரு கோத்திர பிரிவின் சார்பாக சபை கமிட்டி மெம்பராக வர இருந்த திரு. லெவன்ஸ் என்றழைக்கப்படும் திரு. தேவகரம் பால்ராஜ் அவர்கள் இந்த நிபந்தனையை ஏற்றுக் கொள்ளவில்லை தம்மைத் தேர்ந்தெடுப்பதோடு சபையார் நின்று கொள்ள வேண்டும். அதற்கு அடுத்து வர உள்ள சேகர கமிற்றி செயலாளர், பொருளாளர் கவுன்சில் உறுப்பினர்கள் மற்றும் துணைக்குழு உறுப்பினர்கள் தேர்தலில் தாம் தமது விருப்பப்படி செயல்படப் போவதாகவும் தமக்கு நெருக்கமாக இருக்கிற மேட்டூரில் மைனர் என்று அழைக்கப்படும் திரு. B. S. இரத்தினம் அவர்கள் தலைமையிலான அணிக்குத் தாம் ஆதரவளிக்கப் போவதாகவும் கூறினார். இதை சிவசைலனூர் ஊர் கூட்ட கமிட்டியார் ஏற்றுக்கொள்ளவில்லை உடனடியாக வேறு ஒருவரை ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட உள்ள சேகர கமிட்டி உறுப்பினர் பட்டியலில் சேர்த்தனர். சேகர கமிட்டி மெம்பர் பொறுப்பு கிடைக்காததால் மிகுந்த மன வருத்தம் கொண்ட திரு லெவென்ஸ் என்று அழைக்கப்படும் திரு. தேவகரம் பால்ராஜ் அவர்கள் காக்கும் பெருமாள் கூட்டம் குடும்பத்தினரில் தமது கோத்திரத்தைச் சார்ந்த பத்து குடும்பத்தினருடன் சிவசைலனூர் திருச்சபையில் இருந்து பிரிந்து சிவசைலனூரின் கீழ்புறம் கடையம் - பாவூர்சத்திரம் நெடுஞ்சாலையை ஒட்டி இருந்த தமது குடும்ப நிலத்தில் தனி தேவாலயம் கட்டி தேவாலயம் கட்டப்பட்டிருந்த தமது குடும்ப நிலப்பதிவுகளில் இருந்த வன்னிய நாடார் பெயரில் வன்னிய நாடார் பட்டி சபை என்ற பெயரில் தனி சபையை உருவாக்கி அதற்கு திருமண்டல செயற்குழு அனுமதியையும் பெற்று தனி சபையாக அதை அங்கீகரிக்கவும் ஏற்பாடு செய்தார். இந்த தனி சபை உருவான காலத்தில் புலவனூர் சேகர குருவானவர் ஆக அருள்திரு. T. E. V. சாமுவேல் ஐயரவர்கள் இருந்தார்கள். 1995 முதல் இன்றளவும் அந்த சபையும் தேவாலயமும் சிவசைலனூர் கீழக்கோயில் என்றும் வன்னியநாடார் பட்டி கோயில் என்றும் அழைக்கப்படுகிறது. புலவனூர் சேகரம் தற்போது புலவனூர், கடையம், மேட்டூர், ஆசீர்வாதபுரம் என நான்கு சேகரங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அதில் சிவசைலனூர் திருச்சபை புலவனூர் சேகரத்திலும் சிவசைலனூர் கீழக் கோயில் வன்னியநாடார் பட்டி சபை மேட்டூர் சேகரத்திலும் உள்ளது.

## சிவசைலனூரின் மூன்றாவது (தற்போதைய) தேவாலயம்

தற்போது தேவாலயம் அமைந்துள்ள இடத்தில் இருந்த இரண்டாம் தேவாலயம் 2001 ஆம் ஆண்டு முழுமையாக அப்புறப்படுத்தப்பட்டது. தற்போதுள்ள மூன்றாம் தேவாலயம் கட்டப்படுவதற்கு 05. 12. 2001 அன்று புலவனூர் சேகர குருவானவரும் மேற்கு சபைமன்ற தலைவருமான அருள்திரு. D. ராஜபாண்டியன் ஐயரவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. சிறப்பாக கட்டப்பட்ட தற்போதைய (மூன்றாம்) தேவாலயம் புலவனூர் சேகர குருவானவர் அருள்திரு. J. தேவராஜ் ஞானசிங் ஐயரவர்கள் தலைமையில் சிவசைலனூர் சபை ஊழியர் திரு. E. V. பேதுரு அவர்களது காலத்தில் 14. 12. 2002 அன்று நெல்லை பேராயர் மகாகனம். S. ஜெயபால் டேவிட் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

## சிவசைலனூர் TDTA தொடக்கப்பள்ளி

சிவசைலனூர் சபை உருவான தொடக்க காலத்தில் CMS மிஷனரிமார் சிவசைலனூரில் CMS தொடக்கப்பள்ளியையும் தொடங்கினார்கள். இடைக்காலத்தில் TDTA பள்ளி எனும் பெயரைப் பெற்று அதிகமான மாணவ மாணவியர் கல்வி கற்ற பெரிய பள்ளியாக இப்பள்ளி சிறந்து விளங்கியது. தற்போது மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் தாக்கம் காரணமாக மாணவர்கள் எண்ணிக்கை குறைந்ததால் ஈராசிரியர் பள்ளியாக உள்ளது. இப்பள்ளிக்கு சிவசைலனூர் தேவாலயத்தின் தென்புறம் சிறப்பாகப் புதிய கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

## புதிய தேவாலயத்தில் கோபுரம் கட்டப்படுதல்

புதிய தேவாலயத்தில் கோபுரம் கட்டுவதற்காக அருள்திரு. காந்தையா நல்லபாண்டி ஐயரவர்கள் காலத்தில் அடிக்கல் நாட்டப்பட்டது சிறப்பாக கட்டி எழுப்பப்பட்ட புதிய தேவாலய கோபுரம் புலவனூர் சேகர குருவானவர் அருள்திரு. P. ஆமோஸ் செல்வராஜ் ஐயரவர்கள் தலைமையில் சிவசைலனூர் சபை ஊழியர் திரு. S. தனசிங் அவர்களது காலத்தில் 06.04.2015 அன்று நெல்லை பேராயர் மகாகனம் J. J. கிறிஸ்துதாஸ் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

சிவசைலனூரில் இருந்து பிரிந்து சென்ற சிவசைலனூர் கீழக்கோயில் வன்னியநாடார் பட்டி தேவாலயம் சிறப்பாக கட்டப்பட்டதோடு அதில் ஆண்டவருக்கு மகிமையாக சிறப்பான கோபுரமும் நன்கு கட்டப்பட்டு 22. 12. 2015 அன்று மேட்டூர் சேகர குருவானவர் அருள்திரு. ஜான் துரைசிங் ஐயரவர்கள் தலைமையில் 22. 12. 2015 அன்று நெல்லை பேராயர் மகாகனம் J. J. கிறிஸ்துதாஸ் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

## சிவசைலனூர் திருச்சபையின் சமீபகால வளர்ச்சி

1997 - 1998 ஆம் ஆண்டிற்கான திருநெல்வேலி திருமண்டல வருமானச் சுருக்கக் கணக்கு விபரப்படி சிவசைலனூரில் ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்கள் 417 பேர், பரி. நற்கருணைக்காரர்கள் 292 பேர், சிவசைலனூர் TDTA தொடக்கப்பள்ளியில் கல்வி பயின்ற மாணவர்கள் 74 பேர்.

சிவசைலனூர் திருச்சபையில் இருந்து முப்பது ஆண்டுகளுக்கு முன்பு பிரிந்து சென்றவர்களால் உருவான வன்னிய நாடார் பட்டி திருச்சபையில் 1997 - 1998 ஆம் ஆண்டில் இருந்த ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்கள் 69 பேர், பரி. நற்கருணைக்காரர்கள் 42 பேர்,

2002 - 2003 ஆம் ஆண்டிற்கான திருநெல்வேலி திருமண்டல வருமானச் சுருக்கக் கணக்கு விபரப்படி சிவசைலனூரில் இருந்த ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்கள் 468 பேர், பரி. நற்கருணைக்காரர்கள் 353 பேர், சிவசைலனூர் டி. டி. டி. ஏ. தொடக்கப்பள்ளியில் கல்வி பயின்ற மாணவர்கள் 64 பேர்.

சிவசைலனூர் திருச்சபையில் இருந்து பிரிந்த வன்னிய நாடார் பட்டி திருச்சபையில் இருந்த ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்கள் 66 பேர், பரி. நற்கருணைக்காரர்கள் 57 பேர்,

## தற்போதைய சிவசைலனூர் திருச்சபை

தற்போது சிவசைலனூர் திருச்சபையில் 176 கிறிஸ்தவ குடும்பத்தினர் உள்ளனர். 735 ஞானஸ்நானம் பெற்றவர்களும், 549 பரி. நற்கருணைக்காரர்களும் உள்ளனர். சிவசைலனூர் கீழக்கோயில் வன்னியநாடார் பட்டி கிறிஸ்து தேவாலய திருச்சபையில் 20 கிறிஸ்தவ குடும்பத்தினர் உள்ளனர் சுமார் 80 ஞானஸ்நானம் பெற்றவர்களும், சுமார் 60 பரி. நற்கருணைக்காரர்களும் உள்ளனர்.



சிவசைலனூர் கீழக்கோயில்
வன்னியநாடார்பட்டி கிறிஸ்து ஆலயம்



# சாயர்புரத்தைப் புண்ணிய பூமியாக்கிய புனிதர்கள்

பேராசிரியர் .பி.குட்டி ஜாஸ்கர்
போப் கல்லூரி, சாயர்புரம்

**போப் ஜியார்ஜ் யுக்லோ [Rev.G.U.Pope]**



G.U .போப் 1920ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24 ஆம் நாள் பிரின்ஸ் எட்வர்டு தீவில் நோவாஸ்காட்டி பிறந்தார் இளமையிலேயே அறிவுக் கூர்மை உடையவராய் பன்மொழிகளைக் கற்றும் புலமை பெற்றார். இவர் 1842 ஆம் ஆண்டு சாயர்புரம் வந்த சமயத்தில் அவ்வூர் கள்ளரும், நரிகளும், பாம்புகளும் உள்ள முட்புதராய், மணல் மேடுகளாய்க் காட்சியளித்தது. போய் ஐயர் அக்காட்டினைக் கண்கவர் வாழ்விடமாக மாற்றியமைத்தார்.

G.U.போப், கிறிஸ்தவ சமயக் கருத்துகளைப் பரப்புதற்கான கல்வியை போதிக்க, விடுதியுடன் கூடிய சமயக்கல்லூரி ஒன்றை 1843 ஆம் ஆண்டு துவக்கி அவரே அதன் முதல்வரானார். விடுதியில் தங்கிப் படித்த மாணவர் காலையில் 5 மணிக்கு எழும்பி, இரவு 10மணி வரையிலும் உழைத்திடும் நற்பழக்கத்தை ஏற்படுத்தியிருந்தார். மாணவர்களுக்கு நிலநூல், கணிதம், பழங்கால வரலாறு, கிறிஸ்தவ சபை வரலாறு, தமிழ், கிரேக்கு, இலத்தீன், எபிரேயம் முதலிய பாடங்களை பயிற்றுவித்தார். சாயர்புரம் போப் மாணவர்கள் மாநிலத்திலேயே சிறந்தவர்களாக திகழ்ந்தனர். **நல்ல சாப்பாடு, நல்ல அடி, நல்ல படிப்பு** என்ற குறிக்கோளைக் கையாண்டு கல்லூரியை நடத்தினார். 1848 ஆம் ஆண்டில் இக்கல்லூரியில் நூலகம் அமைக்க ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் நிதி உதவி அளித்துள்ளது.

சமயப்பணியின் போது, அவர் மிகுந்த எதிப்பையும், அவமானத்தையும் கிறிஸ்துவின் நிமித்தம் சகித்தார். இருவப்பபுரம் கிராம மக்கள் போப் ஐயரை தங்கள் ஆன்மீக தந்தையாகப் போற்றி, கிறிஸ்தவ மதத்தைத் தழுவினார்கள். ஞாயிறு தோறும் நண்பகல் ஆராதனைக்கு சாயர்புரம் சுற்று வட்டாரக் கிறிஸ்தவர்கள் அனைவரும், ஆலயம் வந்து தொழவேண்டும் என் கண்டிப்புடன் இருந்தார். தற்போதைய மார்ட்டின் பள்ளி போப் ஐயர் காலத்தில் கட்டப்பட்டது. போப் ஐயரின் பிரசங்கத்தினை, மாணவர்கள் பனை ஓலையில் குறிப்பெடுத்துக் கொண்டனர். சாயர்புர வட்டாரத்தில் கிறிஸ்தவமதம் ஆல் போல் வேரூன்றி தழைக்கக் காரணமாவிருந்தார் ஜி.யு.போப்.

போப் ஐயர் தமிழில் பாண்டித்யம் பெற்றவராயிருந்தமையால் திருக்குறள், திருவாசகம், நாலடியார் முதலியவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அவரது பெயரால் தான் தற்போது சாயர்புரத்தில் கல்லூரிகளும், பள்ளிகளும் சிறப்புடன் திகழ்கின்றன.

**ஹக்ஸ்டபிள் ஹென்றி காண்ஸ்றன்றைன [Rev.H.C.Huxtable] :-**



பிரிஸ்டலில் 01-03-1826 இல் பிறந்த ஹக்ஸ்டபிள் ஐவர் அவர்கள் 1852 ஆம் ஆண்டு சாயர்புரம் வந்து, மூடப்பட்ட வேதாகமக் கல்லூரியை மறுபடியும் நிலைநாட்டி அதன் முதல்வராகப் பணியாற்றினார். 1854 ஆம் ஆண்டு, இப்போதுள்ள அழகிய திரித்துவ ஆலயத்திற்கு அஸ்திபாரம் அமைத்த பெருமை அவரையே சாரும். சாயர்புரத்தில் தற்போதுள்ள பரி.ரபாயேல் மருத்துவமனையை சிறிய அளவாக ஸ்தாபித்து அவரே அதன் முதல் மருத்துவரானார். சுகவினத்தின் காரணமாக 1857 ஆம் ஆண்டு தம் தாய்நாடு திரும்பினார். பரி. திரித்துவ ஆயத்திற்கும், பரி.ரபாயேல் மருத்துவமனைக்கும் வித்திட்ட பெருமை கனம் ஹக்ஸ்டபில் ஐவரவர்களையேச் சாரும்.

**பிரதர்டன் தாமஸ் [Rev.T.Brotherton]:**

1809 ஆம் ஆண்டு மே மாதம் 11ஆம் நாள்.பிரிஸ்டலில் பிரதர்டன் ஐவர்கள் பிறந்தார். 1857 முதல் 1859 ஆம் ஆண்டு

வரை சாயர்புரம் வேதாகமல் கல்லூரியின் முதல்வராக பொறுப்பேற்று, பின் நாசரேத்தில் 1860 முதல் 1869 ஆம் ஆண்டு வரை பணியாற்றினார். வேதாகமத்தைத் தமிழாக்கம் செய்வதில் 1851 முதல் 1864 ஆம் ஆண்டு வரை செயல்பட்டார். அனைவருக்கும் இனியராய், காட்சிக்கு எளியோராய்ப் பணி செய்து சாயர்புரத்துக்கு வாழ்வளித்தார்.

**ஆடம்சன் தாமஸ் [Rev.T.Adamson]:**

1833 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 5 ஆம் நான் சென்னையில் பிறந்தார். அவர் வேதாகம கல்லூரியில் 1871 முதல் 1885 ஆம் ஆண்டு வரை முதல்வராகப் பொறுப்பேற்று, திறம்பட பணியாற்றினார். தமது 55 ஆவது வயதிலே, வைசூரி கண்டு, 1888 ஆம் ஆண்டு பெங்களூரில் மரித்தார். சாயர்புரம் அப்புனிதருக்கு கடமைப்பட்டுள்ளது.

**ஷாராக் ஜான் அல்பிரட் [Rev.J.A.Sharrock] :-**



இவர் 1853 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் நாள் அயர்லாந்திலுள்ள கெல்ஸ் என்னும் இடத்தில் பிறந்தார். இவரே முதன் முதலாக சாயர்புரத்தில் கலைக் கல்லூரியை ஆரம்பித்து 1881 முதல் 1883 ஆம் ஆண்டு வரை முதல் முதல்வராக பணியாற்றினார். இதுவரைக் கட்டப்படாமல் அஸ்திபாரத்தோடு நிறுத்தப்பட்டிருந்த பரி. திருத்துவ ஆலயத்தை 1884 ஆம் ஆண்டு அழகுற முடித்தார். தம் பிறந்த நாடாகிய அயர்லாந்திலுள்ள 4 விலையேறப்பெற்ற கற்கள் பதித்த சிலுவையை அவரே இவ்வாலயத்தை அலங்கரிக்க அன்பளிப்பாக கொடுத்தார். அரும்பிரயாசப்பட்டு பணம்சேகரித்துப் பாங்குற கட்டி முடித்து, அதன் பிரதிஷ்டை ஆராதனையை கல்கத்தா அத்தியட்சர் பெருமான் மகாகனம் இ.ஆர்.ஜாண்சன் அத்தியட்சர் தலைமையில் சீரும் சிறப்புமாக நடத்தினார். இவர் மிகவும் கண்டிப்பானவர். ஆலய ஆராதனைக்கு ஒழுங்காக செல்லாதவர்களைத் தன் சேகரமெங்கும் தேடிக் கண்டு பிடித்துப் பட்டியல் படுத்தினார். அதில் 680 பெயர்கள் இருந்தன. அவர்கள் அனைவரின் பெயர்களையும் சபை ரிஜிஸ்தரிலிருந்து நீக்கி திருச்சபையைச் சுத்திகரித்தார். அப்போதிருந்த சபையாரின் மொத்த எண்ணிக்கையே 2400 தான். அதில் 680 பேரை நீக்கவேண்டுமானால் அவரது உறுதிப்பாடு எத்தனை வலிமை கொண்டது! ஷாராக் ஐயர் காலத்தில்தான் போப் நினைவு ஆண்கள் பள்ளியிலும், புனித மேரி பெண்கள் பள்ளியிலும் விடுதிகள் முதன் முறையாக ஆரம்பிக்கப்பட்டன. சாயர்புரம் இன்னும் குக்கிராமமாக மிகக் குறைந்த மக்கள் தொகையே உடையதாக இருந்ததால், ஷாராத் தெரு என்ற தெருவையும், லூக்காபுரம் என்னும் குடியேற்றத்தையும் தோற்றுவித்து, மக்களைக் குடியேறச் செய்தார். இவ்வாறு சாயர்புரம் சபை, ஊர் முன்னேற்றத்தில் அக்கரை கொண்டவராய் வாழ்ந்தார்.

**காடன் ஆர்தர் ஜோசப் [Rev.A.J.Goddon] :-**



1863 ஆம் ஆண்டு அக்டோபர் 19ஆம் நாள் கென்ற்றிலுள்ள கிங்ஸ்நார்த்தில் பிறந்தார். ஷராக் ஐயர் காலத்தில் ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டாலும் அன்று, ஆலய வேலைகள் அனைத்தும் முற்றுப் பெறவில்லை. ஒரு சில பூச்சுமானம் முடிக்கப் பெறாமல் இருந்த குறைகள் எ.ஜே. காடன் ஐயர் காலத்தில், சபையாரின் முயற்சியால் முடிக்கப்பெற்றன. சாயர்புரம் வேதாகமக் கல்லூரியின் முதல்வராகவும், கண்காணிப்பாளராகவும் இருந்தார். பார்க்க நல்ல வசீகரத் தோற்றமுடையவர். அவரது கல்லறை சாயர்புரம் கல்லறைத் தோட்டத்தில் உள்ளது. இவர் எளிய உள்ளம் படைத்தவர்.அனைவருக்கும் நண்பர், அனைவராலும் நேசிக்கப்பட்டவர். தம் மந்தையின் ஆடுகளுக்காக அயராது உழைத்தார். பெரிய வெள்ளிக்கிழமை ஆராதனையில் அவர் உள்ளமுருகப் பாடும் பாடல் அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தும்.அவர் தமது 48 வது வயதிலேயே மரணம் அடைந்தார். அவரது அன்பை சாயர்புரம் மக்கள் மறக்காமல் அப்புனிதரின் உடலை அவர் பணியாற்றிய புண்ணிய மண்ணிலே அடக்கம் பண்ணியுள்ளார்கள்.

**இவான்ஸ் வில்லியம் எட்வாட் [Rev.W.E.Evans]:-** இலண்டன் மாநகரிலுள்ள



உட்கிரீன் என்னும் இடத்தில் 1878 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 6 ஆம் தேதி இவான்ஸ் ஐயர் பிறந்தார். 1906 ஆம் ஆண்டு இலண்டனில் குரு அபிஷேகம் பெற்றார். 1908 - 1910 வரை சாயர்புரம் S.P.G. நடுநிலைப் பள்ளியில் மேலாளராகப் பணியாற்றினார். 1925-37 வரை நெல்லைத் திருமண்டலத்தின் பொருளாளராகத் திறம்பட பணி யாற்றினார். 1934 - 1937 வரை போப் நினைவுப் பள்ளியின் மேலாளராகப் பணியாற்றினார். கனம். இவான்ஸ் ஐயர் பாடகர் வரிசையில் ஒரு புறம் அமர்ந்து பாடகர்களை ஊக்கப்படுத்தினார். அந்நாட்களில் சாயர்புரம் பாடகருக்கு சிறந்த பயிற்சி அளிக்கப்பட்டு, பேர் பெற்றவர்களா இருந்தமையால் பாடகர் வெளி இடங்களுக்கும் பாடும் படியாக அழைப்புப் பெற்று சென்றனர். அவரது சகோதரி குமாரி. இவான்ஸ் அம்மையார் பெண்கள் பள்ளியின் தாளாளராக சிறந்த சேவை செய்தார்கள். அவர்கள் இருவரின் சேவையும் பாராட்டுதற்குரியது.




வரலாற்று நாவல்

# புரட்சிப்புயல்

# ஜிகோர்மைக்கேல்


முனைவர்.ஜான்சி பால்ராஜ்
நாவலாசிரியர்,திருநெல்வேலி
+91 73971 56808

## நெடுந்தொடர் -23

1920-1925 களில் காசி, செம்புலிங்கம் என்ற இரண்டு பெயர்கள் ஒரே பெயரில், திருநெல்வேலி மாவட்டம் முழுவதும் பேசுபொருளாக இருந்துவந்தது. செம்புலிங்கம் கோணவிளைப் புதூரையும், காசி கலந்தபனை என்ற ஊரையும் சார்ந்தவர்கள். இவ்வூர்கள் திருநெல்வேலி நாகர்கோவில் நெடுஞ்சாலையில் பணகுடி என்ற ஊருக்கு அருகில் உள்ளன. வடலிவிளை என்பது அவ்வூர்களுக்கு மிகஅருகில் உள்ள செம்புலிங்கத்தின் மனைவியின் ஊர். பின்னாட்களில் செம்புலிங்கம் வடலிவிளையான் என்றே அறியப்படுகிறான். செம்புலிங்கமும், காசியும் பெரிய அளவில் கருப்பட்டி வியாபாரம் செய்து வந்தனர். நண்பர்களான இவர்கள் மீது தொழில் போட்டியினால் பொய்வழக்குப் போடப்பட்டது.

காவல்துறை என்றாலே சிம்ம சொப்பனமாக இருந்த அக்காலகட்டத்தில், ஒருவன் எதன்பொருட்டாவது காவல் நிலையத்திற்குச் சென்று வந்தவன் என்றால் அவனைப் பெருங்குற்றவாளிகளாக மக்கள் கருதுவது வளக்கமாக இருந்தது. சந்தேகத்தின் பேரில் போலிசாரிடம் அகப்பட்டவன் நையப்புடையப்பட்ட பிறகே சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவர். அன்றைய சமூகத்தில் காவல்துறையினர் சுய நீதிபதிகளாகவே செயல்பட்டனர். குற்றம் சாட்டப்பட்டவனின் நியாயங்கள் கண்டுகொள்ளப்படாமல் விசாரணைகள் என்றபெயரில் குத்துயிரும் குலை உயிருமாக்கப்பட்டுதான் நீதிமன்றங்களில் நிறுத்தப்பட்டனர். அதிலும் நீதிமன்ற உத்தரவுகளுக்கு முன்பே காவல் நிலையங்களிலேயே பெரும்பாலான விசாரணைகள் முடிந்துவிடும்.

மக்கள் போலிசாரை ஏதாவதொரு சர்ச்சையினால் ஊருக்குள் பார்த்துவிட்டால் காரணமே இன்றி ஒவ்வொருவரும் தங்களைக் குற்றவாளிகளாகப் பாவித்து ஓடி ஒழிந்து கொள்வர். இந்நிலையில் குற்றம் சாட்டப்பட்டவன் எனில் பயத்தினால் மனபாதிப்படைந்து விடுவதும் உயிரை விட்டுவிடுவதும்கூட நடைபெற்றதுண்டு. மக்கள் தங்களது கனவுகளில் போலிஸ் ஊருக்குள் வருவதாகவோ அழைப்பதாகவோ கண்டுவிட்டால், எமன் வந்து விட்டதாகவும் மரணங்கள் ஏற்படும் என்றும் அஞ்சும் அளவு மக்களிடையே காவல் துறையினர் செயல்பட்டனர்.




இந்நிலையில்தான் இந்தக் காசி, செம்புலிங்கம் என்ற இரு நண்பர்களும் தங்களைக் காவல்துறைத் தேடுகிறது என்ற செய்தியைக் கேள்விப்பட்டதும் தலைமறைவாக ஊரைவிட்டே ஓடி, காடுகளுக்குள் தஞ்சமாகினர். இதில் செம்புலிங்கம் என்பவன்தான் பெருங்குற்றவாளியாகக் கருதப்பட்டான். செம்புலிங்கம் பிறவியிலேயே பெரும் வீரனாகவும் சொல்வன்மையும் செயல்திறனும் பெற்றவனாகவும் திகழ்ந்தான். உடல்வலிமை மிக்கவனான அவன், இருபதாவது வயதில் தனது ஊரிலுள்ள பெரிய கிணறு ஒன்றை தாண்டியவன். எவரும் தூக்க இயலாத பெருங்கல்லை எளிதாகத் தூக்கும் வலிமையுடையவன். எத்தனை உயரமாக அமைக்கப்பட்ட வேலிகளையும் எளிதாகத் தாண்டுபவன். ஓட்டப் போட்டிகளில் இவனை வேறெவரும் வென்றதில்லை. மதிநுட்பமும் தன்னம்பிக்கையும் மிக்கவனான செம்புலிங்கத்தைக் காவலர்களால் பிடித்துவிட முடியவில்லை.

எனவே அவனைக் கண்டுபிடிக்கத் தகவல் தருமாறு பொதுமக்களுக்கு அறிவுப்புகள் கொடுக்கப்பட்டன. இதனால் ஊருக்குள் வராமல் மேற்குத் தொடர்ச்சி மலையில் மாதக்கணக்கில் ஒழிந்து வாழ்ந்த இவ்விருவரும் உணவிற்காக ஊருக்குள் வந்து வழிப்பறி கொள்ளைகளில் ஈடுபட வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகினர். நடைப்பயணமும் தொலைதூரப் பயணத்திற்கு மாட்டு வண்டிகளும் பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வந்த அக்காலகட்டத்தில், கொள்ளையடிப்பது அவர்களுக்குக் கடினமாக இல்லை. ஆரம்பத்தில் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள சிறு சிறு திருட்டுகளில் ஈடுபட்டு வந்த இவர்கள், ஒரு கட்டத்தில் பணக்காரர்கள் மீது ஏற்பட்ட வெறுப்பால் அவர்கள் மீது மட்டுமே குறிவைத்து கொள்ளைகளில் ஈடுபட்டுவந்தனர். தேவைக்கு மிஞ்சியதை இரவு நேரங்களில் உணவின்றி, வீடுகளின்றி தவிக்கும் மக்களுக்கு உதவியாக அளித்து அவர்களது அன்பையும் நன்மதிப்பையும் பெற்றனர். தொடர்ந்து நடைபெற்று வந்த அவர்களது இச்செயல்களால் ஏழை எளியவர்களின் கதாநாயகனாக செம்புலிங்கம் அறியத் தொடங்கினான்.

மக்கள் அவனைப் பற்றின கற்பனைக் கதைகளையும் பாடல்களையும்கூட உருவாக்கி எங்கும் பேசுபொருளாக்கினர். அவர்கள் இருவரும் அவ்வப்போது இரவு நேரங்களில் ஊர்களுக்குள் வருவதும் உதவிபெற்ற மக்களால் உபசரிக்கப்படுவதும் பாதுகாக்கப்படுவதுமாக வாழ்ந்துவந்தனர். தான் பணபலத்தாலும், தொழில் ரீதியான பொறாமையாலும் அநியாயமாக குற்றம் சாட்டப்பட்டதாக மக்களிடம் கூறி வருந்தினர். அவனது உதவும் குணமும் உண்மையைப் பேசி பழகும் தன்மையும் பாமர மக்களின் இரகசியத் தலைவனாகவே செம்புலிங்கத்தை ஏற்படுத்தியது. பகலில் தனியாகப் பயணம் செய்யும் பெண்களுக்கு வழித் துணையாக அவர்களுக்கே தெரியாமல் பின் தொடர்ந்து சிறந்த காவலாளிகளாகவும் செயல்பட்டான். அன்றைய பெண்கள் வெளியே திருமணம் போன்ற வைபோகங்களுக்குச் செல்லும் போது, உடல் முழுவதும் தங்கப் பொருட்களை அணிந்து செல்வது நாகரீகமாக இருந்தது. இதனால் வழிப்பறிகளும் தாராளமாக நடந்தன. இதற்கிடையே காசி செம்புலிங்கத்தின் பெயரில் வேறு பல கொள்ளையர்களும் பெருகி வந்தனர். இருந்தாலும் இருவரும் தங்களைப் பற்றின புரிதலை மக்களிடையே எடுத்துரைத்து வந்தனர்.

இதனிடையே, தன் குடும்பத்தோடு தொடர்பு கொள்ளமுடியாமல் தவித்த அவனைப் பிடிக்க வகைதேடிய

காவல்துறை ஒரு கட்டத்தில் அவனது குழந்தைகளைத் துன்புறுத்தி அவனது இருப்பிடத்தை அறிய முயற்சித்தனர். ஆனால் ஒன்றுமறியாத சிறுவர்களான அக்குழந்தைகள் மிகுந்த அச்சத்தையும் பாதுகாப்பற்ற நிலையையும் அடைந்தனர். இதனைக் கேள்வியுற்றதிலிருந்து செய்வதறியாது கலங்கி நின்றான் செம்புலிங்கம். அந்த வேளையில் தான் நரைக்காட்டில் ஏமியை சந்தித்து, தனது நிலமையை எடுத்துக் கூறி, தனது குழந்தைகளுக்குப் பாதுகாப்பு அளிக்குமாறு வேண்டினான். ஏமியும் அது தனது கடமையெனக்கூறி, அவனது குழந்தைகளை, தான் பாதுகாப்பதாக அவனிடம் வாக்களித்தார்.

ஏமியும் அவரது தோழியரும் நரைக்காட்டிலிருந்து வந்து அங்கு நடந்தவற்றைத் தெரிவித்ததிலிருந்து, அக்காப்பகம் முழுவதும் செம்புலிங்கத்தைப் பற்றின பேச்சாகவே இருந்தது. செம்புலிங்கத்தில் மூன்று குழந்தைகளும் ஏமியின் காப்பகத்துக்கு கொண்டுவர பட்டனர். எனவே இனி என்ன நடக்கப் போகிறதோ என்ற பயம் அங்குள்ள எல்லோரையும் தொற்றிக் கொண்டது. ஏமி எதற்கும் அஞ்சாமல் தைரியமாக இருந்தார்.

'அம்மா இது நமக்கு அவசியமற்ற செயல் என்று தோணுதும்மா' என்ற அருளாயின் அச்சம் மிகுந்த கிசுகிசுப்பு ஏமியை வியப்படைய வைத்தது. 'என்ன சொல்கிறாய் அருளாயி. . . !? இந்த மூன்று குழந்தைகளும் என்ன பாவம் செய்தன, இவர்களைப் பாதுகாக்க வேண்டியது நம்முடைய கடமை அல்லவா? நான் இதை செம்புலிங்கத்திற்காகச் செய்யவில்லை. குழந்தைகளது உயிரின் பாதுகாப்பிற்காக மட்டுமே செய்திருக்கிறேன். இதனால் எனக்கு எந்தப் பாதிப்பு வந்தாலும் அதை என்னால் துணிச்சலோடு எதிர்கொள்ள முடியும். இதுவரை நம்மைக் காத்த தெய்வம் இனிமேலும் காப்பார் என்பதில் நான் நம்பிக்கையோடு இருக்கிறேன். நீங்களும் அவ்வாறே நடந்து கொள்வது தான் அறிவுப்பூர்வமானது. நமது விசுவாசத்திற்கும் அதுவே ஏற்றதாக இருக்கும்' என்று கூறி அமைதலானார்.

'செம்புலிங்கம் என்னிடம் கேட்டுக் கொண்ட ஒரே ஒரு உதவி இது ஒன்றுதான். தன் பிள்ளைகளை என்னிடம் ஒப்படைத்து அவர்களை நான் பாதுகாக்க வேண்டுமென விரும்பினான். நான் அதை ஏற்றுக் கொண்டவுடன் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தான். அவன் தன்னுடைய பழைய பாவக் காரியங்களை விட்டு விடுவதாகவும், அது சார்ந்த எனது எல்லா அறிவுரைகளையும் ஏற்பதாகவும் வாக்களித்தான். குறிப்பாக இனி துப்பாக்கியைப் பயன்படுத்தி யாரையும் தாக்குவதில்லை என்ற உறுதியையும் கொடுத்தான். நான் அவனைக் காவல் நிலையத்தில் சரணடைடம்படி கேட்டுக் கொண்டேன். அதற்கு அவன் அப்போது உடன்படவில்லை, ஆனாலும், வரும் காலங்களில் தன்னை உணர்ந்து நிச்சயமாக எனது வார்த்தைகளுக்குக் கீழ்படிவான் என்ற நம்பிக்கைக் கொண்டிருக்கிறேன். எவரையும் மாற்ற நம் ஆண்டவரால் முடியும். உண்மையில் அவன் பிறவியிலேயே திருடனோ, கொள்ளையனோ கிடையாது. சூழ்நிலைகளால் தான் அவன் அப்படி மாற்றப்பட்டு இருக்கிறான். எனவே அவன் முழுவதும் மனம் மாறி, திரும்பவும் நல்லவனாக மாற்றமடைவான் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது' என்ற ஏமி நம்மதி பெருமூச்சு விட்டபடி எல்லோரையும் பார்த்தார். அந்தப் பார்வையில் ஒரு வெற்றிப் பெருமிதமும் நம்பிக்கையும் நிறைந்திருந்தது.

'அம்மா உங்களை அவன் ஏற்கனவே அறிந்திருக்கானே. . அது எப்படி?!' என்று அருளாய் கேட்டாள். 'ஆமாம் அதுதான் எனக்கும் வியப்பாக இருந்தது. ஆனால் அந்த நரைக்காட்டில் கட்டிடங்களை நாம் விலக்கி வாங்க முயன்றதிலிருந்தே அவன் அந்தக் காட்டுப்பகுதியில் ஒளிந்து வாழ்ந்து கொண்டிருந்த அவன் நம்மைப் பற்றியும் நமது காப்பகத்தைப் பற்றியும் விசாரித்து அறிந்து வைத்திருக்கிறான். அதுவும் இல்லாமல் நமது ஊருக்கு அருகில் உள்ள இந்தச் செட்டிமேடு என்ற பகுதிக்கு அவன் அடிக்கடி வந்து செல்பவனாகவும் இருந்திருக்கிறான். இங்கு அவனுக்கு நெருங்கிய நண்பர்கள் இப்போதும் இருக்கின்றனர். அவர்களிடம் நமது காப்பகத்தைப் பற்றின எல்லாத் தகவல்களையும் அவன் கேட்டு விசாரித்திருக்கிறான். அதிலிருந்து அவன் என்னைச் சந்தித்துப் பேச வேண்டும் என்ற ஆவலில் இருந்திருக்கிறான். அதற்கு நமது நரைக்காட்டுப் பகுதி உதவியிருக்கிறது.

நாம் அன்று அங்கு சென்றிருந்ததையும் இங்குள்ள அவனுடைய நண்பர்கள் மூலமாக அவன் கேள்விப்பட்டு, நம்மை தேடியே அங்கு வந்திருக்கிறான். அந்தச் சந்திப்பு தான் இன்று இந்த மூன்று குழந்தைகளையும் நமது இல்லத்திற்கு கொண்டு வருவதற்கு ஏதுவாகக் கடவுள் அமைத்துக் கொடுத்திருக்கிறார்' என்று ஏமி பதில் அளிக்க. . அனைவரும் வியப்பும் மகிழ்ச்சியும் கலந்த ஒருவித குழப்பத்தோடு நின்று கொண்டிருந்தனர்.

'தமிழகத்தில் பெரும் குற்றவாளியாகக் கருதப்பட்டுப் போலிசாரால் தேடப்பட்டு வரும் ஒருவனின் குழந்தைகளை எவரிடமும் தெரிவிக்காமல் தனியொருவர் அழைத்துக் கொண்டு வருவதில் தவறு எதுவும் இல்லை என்றா நினைக்கிறாய் ஏமி!?' என்று செவிலியராக இருந்த ஏமியின் தோழி ஹேனா காஸ்டா அதிர்ச்சியோடு வினவினாள்.

'யாரும் எதற்கும் அஞ்ச வேண்டாம். யார் இங்கு வந்து என்னிடம் விசாரணை நடத்தினாலும் என்னால் நிலைமையைத் தெளிவாக எடுத்து விளக்க முடியும். அத்தோடு செம்பலிங்கத்தைப் பற்றின நல்ல நம்பிக்கையை நான் அவர்களுக்கு கொடுப்பேன்' என்று ஏமி கூறினார்.

'சுகந்தி, நீலா நீங்கள் இருவரும் இந்த மூன்று குழந்தைகளையும் முழுக் கவனம் செலுத்தி அவர்களை கவனித்துக் கொள்ள வேண்டும். இந்த உதவியை நீங்கள் இருவரும் செய்ய முன் வந்தால் நான். அதைக் குறித்து மிகவும் மனமகிழுவேன்' என்று அவர்களைப் பார்க்கவும், இருவரும் முகம் மலர்ச்சியோடு 'அம்மா நாங்கள் இதை மிகுந்த மன மகிழ்ச்சியோடு ஏற்கிறோம்' என்று, குழந்தைகளை அழைத்துக்கொண்டு அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட அறைக்குச் சென்றனர். அப்போது அந்தக் குழந்தைகளின் முகத்திலிருந்த அச்சம் விலகிக்கொண்டிருந்தது.

**தொடரும்.**

# காலந்தோறும் கருணாமிர்த சாகரத்திரட்டு- ஒளிபெறும் உருப்படிகள் - பகுதி - 1


ந. சூரிய மூர்த்தி,
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்மொழித் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம் - 05


கடந்த மார்ச் மாத வரலாற்றுச் சுவடுகள் இதழில் ‘கருணாமிர்த சாகரத்திரட்டு’ நூலின் நான்கு பதிப்புகள் மற்றும் அவற்றிற்கிடையே உள்ள அமைப்பு வேறுபாடுகள் பற்றிய தரவுகளைத் தொகுத்து வெளியிட்டிருந்தேன். அவ்வொப்பீட்டு அணுகுமுறையின்போது இதுவரை முதற்பதிப்பைத் தவிர அடுத்து வந்த மூன்று பதிப்புகளில் அச்சாகாத பாடல்கள் உள்ளன என்பதைக் கண்டறிந்து அவை அடுத்தடுத்த இதழ்களில் வெளியிடப்படும் என்றும் கூறியிருந்தேன். அவ்வகையில் 1907-இல் மட்டுமே அச்சாகி அடுத்த பதிப்புகளைக் காணாத இரண்டு உருப்படிகள் ஆபிரகாம் பண்டிதரே அளித்த தலைப்புகளோடு இங்கே வெளியிடப்படுகின்றன.

## பாவமன்னிப்புக்காக தோத்திரம்

தீர சங்கராபரண மேளம் ரூபகதாளம்.

ச ˆரி ˆக ழ ப ˆத ˆநி ச ச ˆநி ˆத ப ம ˆகு ˆரி ச.

| 2 | 4 | 2 | 4 | 2 | 4 | 2 | 4 |
|---|---|---|---|---|---|---|---|
| சா | கரி கக | சா | ரிச நிச | தநி | ப தா ரி | சா | - - - - |
| சா | கரி கக | சா | ரிச நிச | தநி | ப தா ரி | சா | - - - - |
| சரி | கக கக | கக | கா மக | ரிக | ச ரீக | ரீ | - - - - |
| நிச | ரீ - - | சரி | கா - - | கம | பா - - | தப | மக மா |
| பம | கரி கா | மக | ரிசரீ | சநி | சக ரிக | மக | கரி ரிச |

பல்லவி.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சா | கரி கக | சா | ரிச நிச | தநி | பதாரி | சா | - - - - |
| பா | வினது | பா | வமழித்த | பர | மபால | னே | ஏ ஏ ஏ ஏ |
| சா | கரி கக | சா | ரிச நிச | தநி | பதாரி | சா | - - - - |
| பா | வினது | பா | வமழித்த | பர | மபால | னே | ஏ ஏ ஏ ஏ |

அனுபல்லவி.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சரி | கக கக | கக | கா மக | ரிக | சரீக | ரீ | - - - - |
| பல | துயரிடு | மிடி | தீ இர்த்த | பரு | திகோல | னே | ஏ ஏ ஏ ஏ |
| சரி | கக கக | கக | கா மக | ரிக | சரீக | ரீ | - - - - |
| பல | துயரிடு | மிடி | தீ இர்த்த | பரு | திகோல | னே | ஏ ஏ ஏ ஏ |

சரணம்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| நிச | ரீ - - | சரி | கா - - | கம | பா - - | தப | மகமா |
| அரு | ளே ஏ | உரு | வாய் - - | திரு | வான் - - | உயர் | பெறவே |
| பம | கரி கா | மக | ரிசரீ | சநி | சக ரிக | மக | கரி ரிச |
| திரி | முதலே | மரி | மகவாய் | குரு | சதுதனில் | அக | மிகுபெரும் |

பல்லவி.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பா | விளனது | பா | வமழித்த | பர | ம பால | னே | ஏ - - |
| பா | விளனது | பா | வமழித்த | பர | ம பால | னே | ஏ - - |

அனுபல்லவி.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பல | துயரிடு | மிடி | தீஇர்த்த | பரு | திகோல | னே | ஏ - - |
| பல | துயரிடு | மிடி | தீஇர்த்த | பரு | திகோல | னே | ஏ - - |

சரணங்கள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| அரு | ளே - - | உரு | வாய் - - | திரு | வான் - - | உயர் | பெறவே |
| திரி | முதலே | மரி | மகவாய் | குரு | சதுதனில் | அக | மிகுபெரும் |

2

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| நல | மே ஏ | நினை | யே ஏன் | பவ | மே ஏ | நித | மிக வே |
| அதி | உணவாய் | புரி | வதுவே | தொழி | லெனத்திரி | கிற | துயர்மிகு |

3

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கரு | ணா ஆ | கர | னே ஏ | சர | ணா ஆ | கெதி | எனவே |
| பத | மலரே | நித | மனமே | அரு | ளொடுதொழ | நர | கிடர் விட |

4

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பவ | மே ஏ | உரு | வாய் - - | ஜெனி | த்தேன் | அனை | யிடமே |
| அல | குடனே | விட | மரமே | தரு | பவ மற | திரு | முடிபெற |

5

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| உன | தாஆ | பிர | காம் - - | புவி | வான் - - | அருள் | பெறவே |
| உயிர் | கனியே | தரு | மரமாய் | கனி | பவ மற | உயிர் | கனி பெற |

---

## ஏழைக்கிரங்கிக் காக்க தெய்வத்தைப் பிரார்த்தித்தல்

உசேனி

ஆதிதாளம்

ச ˆரி கமு ப ˆத நிச சநி ˆதப மக ˆரிச.

| | 16 | 8 | 8 |
|---|---|---|---|
| | ரீ கா மா பா கா மா கா ரீ | சா - - - - சா | மா ம கரிசா – |
| | - - ரீ கம பா கா மா கா ரீ | சா - - - - சா | மாம கரிசா – |
| | - - ரீ கம பா கா மா கா ரீ | சா - - - - - | - - - - - |
| அனுபல்லவி | - - ப பாப தாநீ நீச், ச், | - நி ச், ˆரீ ச், | நீத ப மா - - |
| | - பச், நிச், நீதா பாமா | பத நீ தாபா | மா கரிசா - - |
| சரணம் | ரீ கா மா பா கா மா கா ரீ | சா - - - - சா | மா ம கரிசா – |
| | - - ரீ கம பா கா மா கா ரீ | சா - - - - சா | மாம கரிசா – |
| | - - ரீ கம பா கா மா கா ரீ | சா - - - - சா | மா மக ரிசா – |
| | - - ரீ கம பா கா மா கா ரீ | சா - - - - - - | - - - - - - - - |
| | - - பபா பதா நீ நீ ச், ச், | - நிச், ˆரிச், | நீ தப மா - - |
| | - - பச், நிச், நீதா பாமா | பத நீ தாபா | மா கரிசா - - |

### பல்லவி.

| | | |
|---|---|---|
| ரீ கா மா பா கா மா கா ரீ | சா - - - - சா | மா மக ரிசா – |
| எ – ன்ன இனிமேலும் வர்ம | மா ஏ | காம்பரநாதா |
| - - ரீ கம பா கா மா கா ரீ | சா - - - - சா | மா மக ரிசா – |
| ஏழையெனக் கிரங்கிக்காரை | யா ஏ | காம்பரநாதா |
| - - ரீ கம பா கா மா கா ரீ | சா - - - - - - | - - - - - - - - |
| ஏழையெனக் கிரங்கிக்காரை | யா - - - - - - | - - - - - - - - |

### அனுபல்லவி.

| | | |
|---|---|---|
| - - பபா பதா நீ நீசா சா | - நிசா ரீசா | நீ தப மா - - |
| - - உன்னை நினைந்துருகி | உடலுமிகக் | கருகி - - |
| - - பசா நிசா நீதா பாமா | பத நீ தா பா | மா கரிசா |
| ஊணுமுறக்க மற்றேன் | உயிர்தவித்தே | ங்குதையா |

### சரணங்கள்.

| | | |
|---|---|---|
| ரீ கா மா பா கா மா கா ரீ | சா - - - - சா | மா மக ரிசா – |
| ஓரிரவோர்யுகமு மாகு | தே - - உனை | அன்றி எனக் |
| - - ரீ கம பா கா மா கா ரீ | சா - - - - சா | மா மக ரிசா – |
| குயிர் கொடுப்பா ரெவருமில்லை | யே ஈ | துண்மை யுண்மை |
| - - ரீ கம பா கா மா கா ரீ | சா - - - - சா | மா மக ரிசா |
| நான் ஒண்டுமிடம் தானும் நீயன் | றோ - - - உயிர் | போன பின்பும் |
| - - ரீ கம பா கா மா கா ரீ | சா - - - - - - | - - - - - - - - |
| நான் ஒண்டுமிடம் தானும் நீயன் | றோ - - - - - - | - - - - - - - - |
| - - ப பாப தா நீ நீ சா சா | - நி சா ரி சா | நீ தப மா - - |
| காரிருள்மூட வன்றோ | கதிர்முக | மும் மறைத்தாய் |
| - - பசா நிசா நீ தா பா மா | பத நீ தாபா | மா க ரி சா – |
| பாரிலுயிர் விடுமுன் | உன்பாதந்தந் | தாளுவாயே |

---

### பல்லவி.

| | | |
|---|---|---|
| எ – ன்ன இனிமேலும் வர்ம | மா - - ஏ | காம்பரநாதா |
| ஏழையெனக் கிரங்கிக்காரை | யா - - ஏ | காம்பரநாதா |
| ஏழையெனக் கிரங்கிக்காரை | யா - - - - - - | - - - - - - - - |

### அனுபல்லவி.

| | | |
|---|---|---|
| உன்னை நினைந் துருகி | உடலுமிகக் | கருகி - - - |
| ஊணுமுறக்க மற்றேன் | உயிர்தவித்தே | ங்குதையா – |

சரணங்கள்.

| | | |
|---|---|---|
| ஓரிரவோர் யுகமுமாகு | தே - - உனை | அன்றி எனக் |
| குயிர்கொடுப்பா ரெவருமில்லை | யே - - ஈ | துண்மை உண்மை |
| நான் ஒண்டுமிடம் தானும் நீயன் | றோ – உயிர் | போனபின்பும் |
| நான் ஒண்டுமிடம்தானும்நீயன் | றோ - - - - - - - | - - - - - - - - |
| காரிருள்மூட வன்றோ | கதிர்முக | மும் மறைத்தாய் |
| பாரிலுயிர் விடுமுன் | உன்பாதந்தந் | தாளுவாயே |

2

| | | |
|---|---|---|
| பாவி எனைப்போலுலகுண் | டோ இப் | பாழுலகில் |
| பாவமன்றி செய்கைவேறுண் | டோ பஞ்ச | மாபாவிநான் |
| பாவி எனக்கிரங்குவாருண் | டோ உன் | னையன்றி |
| பாவி எனக்கிரங்குவாருண் | டோ - - - | - - - - - - - - - |
| கூவித்தவித்து நின்றும் | குறைதவிர்த் | தாள்வாயென்று |
| சேவித்தடி பணிந்தேன் | தேவாதிதே | வாயென்மேல் |

3

| | | |
|---|---|---|
| தேனதிலும் தித்திக்குமுன் | வாய் செங் | கமலமலர் |
| ஜீவனெனக் கென்றுமீயு | மே தே | வாமிர்தமொழி |
| தினமுமுடற் காறுதலன் | றோ திரு | மேனிரூபம் |
| தினமுமுடற் காறுதலன் | றோ - - - - - - | - - - - - - - - |
| நானுனையன்றி மான்போல் | நலிந்து மிக | வலைய |
| கானில் தனித்துவிட்ட | கண்ணே இனிச் | சகியேன் |

4

| | | |
|---|---|---|
| தனித்துவிட மனமும்வந்த | தோ தா | யற்ற சேய்போல் |
| தவித்துநிற்க விட்டதேதை | யா த | யாகுணநாதா |
| தாங்கிக்காப் பாராருமில்லை | யே த | யாளப்பிரவாகா |
| தாங்கிக்காப்பா ராருமில்லை | யே - - - - - - | - - - - - - - - |
| தமியேனுன் புகழ்சொல்ல | தருணம்வந் | துயிர்தந்தால் |
| புவியுள்ளவரை சொல்ல | புகழ்மாலை | கட்டிவைப்பேன் |

5

| | | |
|---|---|---|
| அந்தக்கரணம் யாவும்சுத்தித் | தேன் ஆங் | காரமுட்காட்டை |
| அறப்பறித்து அக்கினியிட் | டேன் நா | னென்றுமாம் |
| அழித்துமனம் சமப்படுத்தி | னேன் ஆதி | காரணநாதா |
| அழித்துமனம் சமப்படுத்தி | னேன் - - - - - | - - - - - - - |
| முத்திவிதை விதைத்து | முளைத்துப் ப | லன்பெறவே |
| பக்குவகால மென்றே | பலதரம் கெஞ் | சி நின்றேன் |

6

| | | |
|---|---|---|
| பாரிலுள்ளோர் எவரும் நிந்திப் | பார் நின் | பற்றேயற்ற |
| ஆரறிவார் அந்தரங்கத் | தை அழி | வாகுமண்மேல் |
| உரிமைதனை எவருக்குச்சொல் | ல ஒரு | போதுஞ்சொல்லேன் |
| உரிமைதனை எவருக்குச்சொல் | ல - - - - - | - - - - - - |
| காரிருள் நின்றுதித்த | கண்ணே என் | கண்மணியே |
| கண்டோ னுனையன்றி | காண்போருல | குண்டோ |

7

| | | |
|---|---|---|
| பச்சைரத்தின முத்துவைர | மோ உந் | தன்மேனி |
| பவளநிறச் செம்பொன்னுரு | வோ பா | தங்கள் ரண்டும் |
| செங்கமலச் சிறந்த புஷ்ப | மோ செல் | வந்தரு கைகள் |
| செங்கமலச் சிறந்தபுஷ்ப | மோ - - - - - | - - - - - - - |
| பஞ்சவர்ண கிளிமொழியோ | பாலோ கற் | கண்டோ தேனோ |
| கெஞ்சுமடியார் துன்பம் | துஞ்சநோக்கி | டுங் கண்ணே |

8

| | | |
|---|---|---|
| ஜீவநதிபாயுமானந் | த சிங் | காரத்தோட்ட |
| சிறந்தகனி பழுத்தொழுகு | தே சி | காரமலர் |
| செழித்துமிகத் தேனொழுகு | தே தென் | றல்வீச |
| செழித்துமிகத் தேனொழுகு | தே - - - - - - | - - - - - - - |
| தீங்குயில் தாளம்போட | சிறந்த ஆபி | ரகாம்பாட |
| தாங்குதில்லையே யென்று | தத்தையை தூ | துவிட்டேன் |

பெரும்பான்மையும் மூலபாடத்திற்கு நெருக்கமாகவே இவற்றை இங்குத் தர முயற்சித்திருக்கின்றேன். மந்திர ஸ்தாயி சுரங்கள் பண்டிதரின் பதிப்பில் கீழே புள்ளியிட்டுக் காட்டப்பட்டிருந்தன. அவை இங்கு 'அடிக்கோடி'ட்டுக் காட்டப்பட்டுள்ளன. மேல் ஸ்தாயிகள் மேற்புள்ளியிட்டுக் காட்டப்பட்டிருக்க, அவை இங்கு 'மேல் அம்பு' குறியிட்டுக் காட்டப்பட்டுள்ளன. (விதிவிலக்காக மேல் ஸ்தாயி சட்ஜம் மட்டும் புள்ளியிட்டுக் காட்டப்பட்டுள்ளது.) பண்டிதரின் பதிப்பில் மேல் ஸ்தாயி சட்ஜத்தின் கார்வை துணைக்கால் வடிவில் இருக்க, அது இங்கு (உலிதுதுழி) ','-ஆகக் கொடுக்கப்பட்டுள்ளது. இராகங்களின் ஆரோகண அவரோகணங்கள் அவரது பதிப்பில் உள்ளது போலவே அம்பு குறிகளிட்டுக் காட்டப்பட்டுள்ளன. வாசகர்கள் நெருடலின்றி அவற்றைப் புரிந்துகொள்வார்கள் என நம்புகின்றேன். அடுத்த பகுதி அடுத்த இதழில் வெளியாகும்.


**ஆசிரியர்**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**

**கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,**

**பங்களாச் சுரண்டை-627859,**

**தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)**

**04633 290401, 91767 80001**



christianhistoricalsociety.in

tchsportal.co.in

christianhistorical@gmail.com




*"Remember the days of old; consider the years of many generations; ask your father, and he will show you, your elders, and they will tell you"*

*(Deut. 32:7 ESVA).*

*We, the People of God are exhorted to keep alive the memory of our faith history and pass it on to our sons and daughters. The Christian Historical Society endeavours to help Tamil-Christian community to fulfill this noble obligation.*

***All praise and glory be to God!***

***Shalom Greetings to you in the name of our Lord and Saviour Jesus Christ!***

*The Christian Historical Society (=CHS) is the fruit of the diligent efforts of numerous Tamil-Christian historians who in the light of Deuteronomy 32:7 seek to document as well as write the faith history of Tamil-Christian community with the active involvement of numerous young volunteers. To cover wider areas where our community has its roots, collaborations are underway with historians and like-minded individuals throughout Tamil Nadu.*

*By God's grace and with prayerful support of Friends, CHS has initiated several activities towards realising its objectives during the past five years since inception. The important ones being:*

- *Publication of the monthly magazine, Kristhava Varalaatru Suvadugal*
- *Reprinting books which contain historical accounts of Tamil-Christian community*
- *Compilation and digitalising of antiquarian texts and documents*
- *Organising Mission Tours to places of historical importance*
- *Establishment of a Library with space for Museum, Research, Seminars etc.*

*Currently, with the benevolent donation of land by a Friend, God has enabled CHS to start the building project for Library cum Research & Development Centre at Surandai. Few individuals are donating and have promised to donate portion of construction material. We need to buy remaining construction material and furnishings for the Library and Seminar Hall.*

*We cordially invite families, individuals and organisations to contribute generously to complete the momentous library building, God willing by June 2024.*

*In God's mission,*

*Manna Selvakumar*
*+91 9176780001*

# கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் நடத்தும் கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் மாத ஆய்விதழை நண்பர்கள், உறவினர்களுக்கு அறிமுகப்படுத்த அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன். கடந்த நான்கு வருடங்களாக ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து வெளி வந்து கொண்டு இருக்கின்றது. மறைக்கப்பட்ட, மறைந்த, மறந்த வரலாற்றுப் பக்கங்களை அடுத்த தலைமுறையினரின் கரங்களில் கொடுப்பது நம் கடமை.

சங்கத்தின் 'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்' மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள விரும்பினால் அதற்கான ஆண்டு சந்தா 600 ரூபாய் ஐந்து ஆண்டுக்கான சந்தா 3000 ரூபாய் மட்டுமே. மற்றும் G-Pay மூலம் நன்கொடை செலுத்த விரும்பினால் 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும். காசோலை மற்றும் வரைவோலை செலுத்த 'கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்' (Christian Historical Society) என்ற பெயரில் எடுத்து அனுப்பவும்.

நன்கொடை சந்தா செலுத்திய தகவலை கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசி எண் அல்லது வாட்ஸ் ஆப் அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு மறக்காமல் தெரியப்படுத்தவும்.




**மாத ஆய்விதழ் சந்தா விபரம்**

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |


**ஆசிரியர்**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
**கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,**
**பங்களாச் சுரண்டை-627859,**
**தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)**
**04633 290401, 91767 80001**


**வங்கி விபரம்**

Name: Christian Historical Society
A/c Number : 1748 020000 4906
Bank name : Federal Bank
IFSC code: FDRL0001748


christianhistoricalsociety.in
tchsportal.co.in

christianhistorical@gmail.com

*பல்துறை வித்தகர்*

# ஜார்ஜ் ஆர்தர்!

பேசும் பொம்மை ஷாந்தகுமார்
சென்னை



எங்கள் அருமைத் தகப்பனார், திரு. ஜார்ஜ் ஆர்தர் தன்னுடைய இடை நிலை ஆசிரியர் பணியில் மிளிர்ந்தாலும், அவர் ஒரு பல்துறை வித்தகராகப் பரிமளித்தார்.

ஆம்! அவர்கள் ஆர்கன், மற்றும் பிடில் இசைக் கலைஞர், ஆலயப் பாடல் குழுவின் இயக்குநர், ஒட்டுப் பலகையில் பின்னல், மற்றும் சித்திரங்களை உருவாக்கும் கைத்தொழில் ஆசிரியர், சாரணப் (ஸ்கவுட்) பயிற்சியாளர், தட்டச்சு, சுருக்கெழுத்து, மற்றும் கணக்கியல் (அக்கவுண்டன்சி) ஆசிரியர், ஹாக்கி, டென்னிஸ், பூப்பந்து, கேரம் போன்ற விளையாட்டுகளில் வல்லுநர், புத்தகப் பிணைப்பாளர் (Binder) மற்றும் மாணவர்களைச் சுற்றுலா அழைத்துச் செல்லும் பயண முகவர்! ஹூம் ஹூம்... எனக்கு மூச்சே வாங்குது!

> இக்கட்டுரை எழுதப் பட்டதின் நோக்கம் பெருமைக்காக அல்ல. இதைப் படிக்கும் ஒவ்வொருவருக்கும் இது ஒரு உத்வேகத்தை ஊட்டக் கூடிய அளவுக்கு வைட்டமினாக உதவ வேண்டும் என்பதே!

## ஏழ்மை:

திரு. ஜார்ஜ் ஆர்தர் தன்னுடைய தகப்பனாரைத் தனது நான்காவது வயதில் பறி கொடுத்தவர். அவருடைய தாய், திருமதி. ஜேன் மேரி தன் நான்கு ஆண் பிள்ளைகளையும் வளர்க்க அரும்பாடுபட்டார். அதில் ஒருவர் இள வயதில் இறந்து விட்டார்.

அவர்களுடைய வாடகை வீடு பரங்கி மலையில் இருந்தது. எங்கள் தகப்பனார், தினமும் சைதாப்பேட்டையில் உள்ள அரசினர் மாதிரி உயர்நிலைப் பள்ளிக்குச் செல்லத் தன்னுடைய கால் சக்கரங்களையே பயன்படுத்தினார். காரணம் பேருந்தில் செல்லக் கூட காசில்லை. தினமும் போய் வர, சுமார் 14 கிலோ மீட்டர் தூரம் நடக்க வேண்டியதாயிற்று.

## இசைக் கலைஞராக:

ஆலந்தூரில் உள்ள சி.எஸ்.ஐ. ஆலயத்தில் உள்ள பாடகர் குழுவில் என் தகப்பனார் பத்து வயதிலேயே தன்னை இணைத்துக் கொண்டார். பாடுவது தவிர, இசைக் குறியீடுகளையும் கற்றறிந்தார். அவருக்கு ஆர்கன் கருவி வாசிப்பதில் அலாதிப் பிரியம். ஆனால் ஹார்மோனியம் வாங்கவே வழியில்லாத அளவுக்கு ஏழ்மையில் அமிழ்ந்திருந்தார்.

வேறு வழியின்றி சுண்ணாம்புத் துண்டை (சாக் பீஸ்) எடுத்தார். தரையில் ஆர்கனின் வெள்ளைக் கட்டைகளையும், கருப்புக் கட்டைகளையும் படமாக வரைந்தார். அதை அழுத்திப் பயிற்சி செய்தார். அதை அழுத்தினால் எந்தச் சத்தமும் வராது. ஆனால் சத்தம் வருவதாகக் கற்பனை செய்து கொண்டு, மிகவும் கடினமான முறையில் கற்றுத் தேர்ந்தார்.

ஒரு ஞாயிறு காலை... ஆலயத்தின் ஆர்கனிஸ்ட் வரவில்லை. போதகரின் வேண்டுகோளுக்கிணங்க, என் தந்தை ஆர்கனை இசைவித்தார். அவருடைய வாசிப்பில் மயங்கிய போதகர் அவரையே எல்லா வழிபாடுகளிலும் வாசிக்கும்படி பணித்தார்.

திருவண்ணாமலைக்கு வந்தப் பிறகு, என் தகப்பனாரின் வாசிக்கும் திறமையைப் பார்த்த டேனிஷ் மிஷன் பள்ளியின் தலைமை ஆசிரியராகிய திரு. ஜேசுதாசன் அவர்கள் கார்மேல் தேவாலயத்தில் ஆர்கன் வாசிக்கும் பொறுப்பை என் தந்தைக்கு வழங்கினார்கள். பின்பு பாடல் குழுவினரின் இயக்குநராகவும் என் தந்தை சேவை புரிந்தார்கள். ஒரு வருடம், இரண்டு வருடங்கள் அல்ல! முப்பது வருடங்கள்! (கை வலிக்குமில்லே? )

அது மட்டுமல்ல. ஆர்கனில் உள்ள எந்தக் கட்டையை அழுத்தினாலும் கண்களால் பார்க்காமலேயே அழுத்தியது எந்தக் கட்டை என்று துல்லியமாகச் சொல்லி அசத்தும் புத்திக் கூர்மையைப் பெற்றிருந்தார்கள். பின்பு ஃபிடில் கருவியையும், கர்நாடக சங்கீதத்தையும் கற்றுத் தேர்ந்தார்கள். டேனிஷ் மிஷன் பள்ளியில் காலை அசெம்ப்ளியில் எங்கள் தந்தை ஆர்மோனியம் வாசித்து, பாடல்களுக்கு மெருகூட்டினார்கள். மேலும் பள்ளியின் பாடகர் குழுவை வழி நடத்தினார்கள்.

## தட்டச்சகப் பணியாளராக:

என் தாத்தா, திரு. அருமைநாயகத்தின் முதல் பாதிப் பெயருடன் தட்டச்சகத்தை ஆரம்பித்து, ஐம்பது ஆண்டுகள் மிகவும் சீரும் சிறப்புமாக இயக்கினார்கள். சிறந்த முறையில் எப்படி தட்டச்சு செய்ய வேண்டும் என்ற ரகசியத்தைக் கண்டு பிடித்தார்கள். அதன் பெயர் 'ஸ்டெப் பை ஸ்டெப்' செயல் முறை.

அதாவது தட்டச்சு இயந்திரத்தில் இரண்டு முறைத் தட்டுவதற்கு இடையே சம இடை வெளி கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்காமல் வேகமாக அடித்தால் தவறுகள் அதிகமாகும். சில இடை வெளிகளிகளில் அதிக நேரம் எடுத்துக் கொள்வதால், சராசரி வேகமும் குறைந்து விடும்!

எனக்கு முதலில் இது ஆச்சரியமாக இருந்தது. ஆனால் இந்த முறையைப் பயன்படுத்திப் பார்த்ததில் உண்மை புலப்பட்டது. இச்சிறந்த முறையைப் பின்பற்றிய இத்தட்டச்சகம் தமிழ் நாடு மாநிலத்திலேயே சிறந்த தேர்வு முடிவுகளைப் பெற்று அசத்தியது.

மேலும் என் தகப்பனாருக்கு அரசுத் தேர்வுகளுக்கான விடைகளைத் திருத்தும் பணி கிடைத்தது. செயல் முறைத் தேர்வுக்காக (Practical) மாணவர்களை நேரிடையாகச் சோதிக்கும் பணியையும் அரசு வழங்கியது.

> என் தந்தைக்கு காது நீளம். அவர்கள் தாழ்வாரத்தில் அமர்ந்திருந்தாலும், உள்ளறையில் யாராவது தட்டச்சின் ‘பேக் ஸ்பேசரை’ அழுத்தினால் உடனே கண்டுபிடித்து, “ரெமிங்டன் 16-இல் யார் பேக் ஸ்பேசரை அழுத்தினாங்க?” என்று கண்டிப்பார்கள். பேக் ஸ்பேசரை அடிக்கடிப் பயன்படுத்தினால் தட்டச்சு பழுதடைந்து விடும் என்பது அவர் கருத்து.

## வொர்க்கஹாலிக்காக:

காலையில் ஐந்து மணிக்கே எழுந்து தட்டசகத்தைத் திறந்து தன் பணியைத் துவக்குவார்கள். பின்பு பள்ளியில் வேலை. மதிய இடைவேளையிலும் தட்டச்சகத்துப் பணி! பிறகு பள்ளி. பின்பு மாலை, இரவு என்று எப்பொழுதும் வேலை, வேலை, வேலை! மாலை வேளைகளில் விளையாடக் கூட நேரமிருக்காது. விளைவு..? சர்க்கரை நோய் அவர்களை நண்பராக்கிக் கொண்டது.

## நற்செய்தியாளராக:

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் மாலை வேளைகளில் நற்செய்திப் பணிக்காக அருகில் உள்ள கிராமங்களுக்குச் செல்வது வழக்கம். இப்பணியில் அவருடன் இணைந்து கொண்ட ஆசிரியர்களான, திருவாளர்கள் கிரஹம், அசரியா, தனராஜ், ஆசீர்வாதம் மற்றும் தியாகராஜன் ஆகியவர்களைக் கீழே உள்ள படத்தில் பார்க்கலாம்.

புனித வெள்ளியன்று தியானிக்கப் படும் ஏழு வார்த்தைகளில் ஒரு வார்த்தையைப் பற்றி என் தந்தை அருளுரை வழங்குவது வாடிக்கை.

## திருச்சபைக் குழு உறுப்பினராக:

என் தந்தை திருச்சபைக் குழு உறுப்பினராகவும், பொருளாளராகவும் சில முறைப் பணியாற்றினார்கள். அறுப்பின் பண்டிகை ஏலத்தின் போது, மூவருள் ஒருவராக என் தந்தையும் ஏலக் கணக்குகளை எழுதிக் கூட்டல் போட்டு மற்றவர்களின் கணக்கோடு சரி பார்ப்பார்கள். சுருக்கெழுத்து அறிவு அவர்களுக்கு கை கொடுத்திருக்கக் கூடும்.

## பரோபகாரியாக:

என் அப்பா தட்டச்சுப் பயிலகத்தில் படிக்கும் மாணவர்களின் ஏழ்மைக்கு ஏற்ப குறைவான கட்டணத்தையே வசூலித்தார்கள். சிலர் தவணை முறையில் கட்டினார்கள். சிலருக்கு சில மாதங்களில் மாதக் கட்டண வாங்குவதில்லை. இத்தனைக்கும் அறுபதுகளில் லோயர் க்ரேட் தட்டச்சுக்கானக் கட்டணம் வெறும் மூணே ரூபாய்தான். ஹையருக்கு நான்கு ரூபாய். குறுக்கெழுத்துக்கு பத்து ரூபாய். “இக்கட்டணத்தைக் கூடக் கட்ட முடியாத மக்கள் நிறையப் பேர் இருந்தாங்க!” என்று ஆதங்கப்படுவார். பிறகு மற்றப் பயிலகங்களின் நிர்ப்பந்தத்தால், கட்டணம் பத்து ரூபாயாகக் கூடியது.

அக்காலக் கட்டத்தில் திருவண்ணாமலையில் கல்லூரி இல்லை. ஐ.டி.ஐ. இல்லை. கம்ப்யூட்டர் இல்லை. வேலை வாய்ப்பும் இல்லை. இப்படிப்பட்ட இக்கட்டானக் கட்டத்தில், தட்டச்சுப் பயின்றால் மிகவும் எளிதாகவும், விரைவாகவும் வேலை கிடைத்தது ஒரு வரப் பிரசாதமாக அமைந்தது. எங்கள் பயிலகத்தில் பயின்ற பலர் அரசு அலுவலகங்களிலும், மின்னலுவலகங்களிலும், தனியார் நிறுவனங்களிலும் வேலையில் சேர்ந்தார்கள். இதையே என் தந்தை ஒரு சமூகச் சேவையாகச் செய்தார்கள்.

திரு. எபினேசர் எனும் மாமாவின் மகள் சரோஜா அக்காவை வேலூரில் உள்ள ஆசிரியைகளுக்கான பயிற்சிப் பள்ளியில் சேர்த்தார்கள்.

எங்கள் அண்டை வீட்டார் திருமதி. ஜானகியின் மகள் சுசிலா அக்காவைத் திருக்கோயிலூரில் உள்ள டேனிஷ் மிஷன் ஆஸ்பத்திரியில் மருத்துவச்சிக்கானப் பயிற்சியில் சேர்த்தார்கள். அவர்களுக்கு திருவண்ணாமலையிலேயே வேலை கிடைத்தது.

ஒரு வாலிபர் வேலைக்காக கிராமத்திலிருந்து வந்து என் தந்தையைச் சந்தித்தார். பெயர் நினைவிலில்லை. அவருக்கு மரத்தில் கைத்தொழில் செய்யும் வேலைக்கான பயிற்சியில் என் தந்தை சேர்த்து விட்டார்கள். உடனே வேலையும் கிடைத்தது.

திரு. மார்ட்டின் மாமாவும் நாங்களும் ஒரே வீட்டில் வாழ்ந்தோம். ஒரு நாள் பிள்ளைகளாகிய நாங்கள் புளியங் கொட்டைகளை வைத்து விளையாடும்போது, என் மாமாவின் மூன்று வயது மகனான, விஜயக்குமார் மூக்குக்குள் ஒரு கொட்டை போய் விட்டதாகக் கூறினான்.

நாங்கள் சத்தம் போடுவதைக் கேட்டு என் தந்தை விரைந்து வந்தார்கள். விஷயத்தை அறிந்து உடனே அவனை லிவிங்ஸ்டன் டாக்டரிடம் அழைத்துச் சென்றார்கள். டாக்டர் ஒரு மெல்லியக் கம்பியை உள்ளே செலுத்தி கொட்டையை இலாவகமாக எடுத்தார். விஜயக்குமாரை அவர்கள் இருவரும் அன்று பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றினார்கள்.

இது போலவே, கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு ஐந்து ரூபாய் வழங்குவார்கள். அவ்வூழியக்காரர்களும் மகிழ்ச்சியுடன் பிரார்த்தனை செய்து ஆசீர்வதித்து விட்டுச் செல்வது வழக்கம். இதனால் கர்த்தரும் எங்கள் குடும்பத்தை இரு மடங்கு ஆசீர்வதித்தார். (ஏசாயா 61:7)

## நேர்மையாளராக:

தேர்தல்கள் எல்லாம் வருவதற்கு முன்பு, ஒரு டேனிஷ் துரை என்னுடைய அப்பாவின் நேர்மையைக் கண்டு வியந்து, "நீங்கதான் இனிமே இந்தத் திருச்சபைக் கணக்குகளைப் பார்த்துக்கணும்!" என்று அப்பணியை ஒப்படைத்தாராம். தேர்தல் வந்த பின்பும் நேர்மையாளராக இருந்தமையால், என் தந்தை சில முறை பொருளாளர் பதவியை ஏற்றுக் கொண்டார்கள்.

மாணவர்களைச் சுற்றுலா அழைத்துச் செல்லும் பயண முகவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டதற்குக் காரணமும் அவருடைய நேர்மைதான்!

ஐம்பதுகளில் நாங்கள் சிறுவர்கள். அச்சமயம் மாதமொரு முறை கண் பார்வைக் குறைவுள்ள ஒரு யாசகர் ஆர்மோனியம் வாசித்தவாறே கிறித்தவப் பாடல்கள் பாடிக் கொண்டு, எங்கள் வீட்டுக்கு வருவது வழக்கம். அவருக்கு எட்டணா நாணயத்தைக் கொடுக்கும்படி எங்கள் அப்பா கூறுவார். அக்காலத்தில் அரையணாவுக்கு ஒரு வடை கிடைக்கும். இப்பொழுது அதன் விலை குறைந்தது பத்து ரூபாய். அதாவது பண மதிப்பு 320 மடங்கு அதிகமாகிவிட்டது. அப்படியென்றால் அன்றைய எட்டணாவின் இன்றைய மதிப்பு 160 ரூபாய். அவ்வளவு பெரிய தொகையை எவருக்காவது நாம் மாதமொரு முறை கொடுப்போமா?

## விளையாட்டு வீரனாக:

சைதாப்பேட்டையில் உள்ள விளையாட்டு மைதானத்தில், என் தந்தையின் அபார ஹாக்கி விளையாட்டைப் பார்த்துப் பாராட்டிய சென்னை நந்தனத்தில் உள்ள ஒய்.எம்.சி.ஏ. எனும் உடற்கல்விக்கானக் கல்லூரியை (ஆசியாவிலேயே முதல் கல்லூரி) 1920-இல் ஸ்தாபித்த ஹாரி க்ரோ பக் எனும் அமெரிக்கர் (கூகுளில் அவரைப் பற்றிய பல விவரங்களைப் படித்து மலைத்துப் போனேன்!), மேல் படிப்புக்காக அடுத்த நாள் தன்னை வந்து பார்க்கும்படிக் கூறினாராம். ஆனால் என் தந்தையிடம் பணம் இல்லாததால், அவரைப் போய்ப் பார்க்கவே இல்லையாம்! என்னிடம் பகிர்ந்து கொண்ட நெகிழ்வான நிகழ்ச்சி இது! ஆனால் எனக்கோ அவரைப் போய் பார்த்திருக்கலாமே என்று இப்பொழுது தோன்றுகிறது.

அது மட்டுமல்ல. பரங்கி மலையில் உள்ள காரிசன் ஆலயத்திற்கும், வேலூர் ரோடுக்கும் நடுவே உள்ளத் தெருவில்தான் என் அப்பாவின் ஜாகை. காரிசன் ஆலயத்திற்கு தெற்கே உள்ள மைதானத்திலும் என் தந்தை நிறைய வெளி நாட்டினரோடு ஹாக்கி விளையாடி அசத்தி இருக்கிறார்கள். அவர்கள் ஆஃபீசர்ஸ் ட்ரெயினிங் அகாடமியிலிருந்து வருவர். அவர்களில் சிலர் காரிசன் ஆலயத்தில் ஃபிடில், மற்றும் ஆர்கனைச் சிறப்பாக வாசித்தார்கள். அருகிலிருந்து அவர்கள் வாசிப்பதை என் தந்தை உன்னிப்பாகப் பார்த்து, அவர்களிடமிருந்து இசை நுணுக்கங்களை கற்றுக் கொண்டார்கள்.

திருவண்ணாமலை டேனிஷ் மிஷன் பள்ளியில் ஆசிரியராக இருந்தபோது, மாணவர்களுக்கு என் தந்தை ஹாக்கி கற்றுக் கொடுத்து, போட்டிகளில் சிறப்பாக விளையாட பயிற்சி கொடுத்தார்கள். ஒரே மைதானம் இருந்ததால், வாரத்தில் மூன்று நாட்கள் கால் பந்தும், மூன்று நாட்கள் ஹாக்கியும் விளையாட அனுமதி வழங்கப் பட்டது. அப்பொழுது இருந்த பெரிய மாவட்டமாகிய, வட ஆற்காடு மாவட்ட அளவில் நடக்கும் போட்டிகளில் சுமார் 15 முறை வெற்றிக் கோப்பையைக் கைப்பற்றிய பெருமை டேனிஷ் மிஷன் பள்ளிக்கு உண்டு. அப்படி வெற்றி பெற்ற அணிகளின் எல்லாப் படங்களிலும் என் தந்தையும் இடம் பெற்றிருந்தார்கள். ஒரு படத்தில் தலைமை ஆசிரியராகப் பணி புரிந்த திரு. சௌந்தர ராஜன் அவர்களை இள வயது ஹாக்கி வீரனாகப் பார்த்திருக்கிறேன்.

என் அக்கா சொன்னார்கள்... "ஒரு ஆண்டு விழாவில் மேடையில் பரிசுப் பொருட்களை வழங்கிக் கொண்டிருந்தாங்க. அப்ப டென்னிஸ், பாட்மிண்டன், கேரம், கண்களைக் கட்டி மாட்டுக்கு வால் வரையும் போட்டி போன்ற பல போட்டிகளில் அப்பாதான் ஃபர்ஸ்ட். மேடைக்கு ஏறி ஒவ்வொரு பரிசையும் வாங்கினாங்க. மகிழ்ச்சியில ஸ்டூடன்ஸ் நிறுத்தாம கைத் தட்டினாங்க. எனக்கு ரொம்பப் பெருமையா இருந்திச்சி..."

பூப்பந்து, மற்றும் டென்னிஸ் மட்டையை எப்படிப் பிடிக்க வேண்டும் எனும் நுட்பத்தை எங்கள் தந்தை எனது அண்ணன், ஜெயக் குமாருக்கும், எனக்கும் கற்றுக் கொடுத்தது எங்களுக்கு மிகவும் அனுகூலமாக இருந்தது.



## சாரணப் பயிற்சியாளராக:

வழக்கமாக சாரணப் பயிற்சியை மற்ற சில ஆசிரியர்களும், என் தந்தையும் வழங்கினர். மேலும் சுற்றுலா செல்லும்போதெல்லாம், சாரணப் பயிற்சியும் உண்டு. முக்கியமாக என் தந்தை பல வகையான முடிச்சுகள் போடவும், அவிழ்க்கவும் பயிற்சி கொடுப்பதில் நிபுணர். மேலும், ஸ்கவுட் மாணவர்கள் கூம்பு வடிவத்தில் குச்சிகளைப் பிடித்து நிற்க, அதன் கீழ் பள்ளிக்கு வரும் விருந்தினர்கள் அல்லது, மேலதிகாரிகள் நடந்து வர, அவர்களுக்கு முன்னால் பேண்ட் வாசித்து அவர்களை அழைத்து வரும் காட்சி கண் கொள்ளாக் காட்சி. இந்த இராஜ உபசாரத்தில் மயங்காத விருந்தினர்களும் உண்டோ?

**பயண முகவராக:**

மாணவர்களைச் சுற்றுலா அழைத்துச் செல்லும் பயண முகவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்! இது நன்கு திட்டமிட்டு



செயல்படுத்த வேண்டிய சவாலான வேலை!

**கைத் தொழில் ஆசிரியராக:**

'ப்ளைவுட்' போன்ற மெல்லிய ஒட்டுப் பலகையில் சித்திர அறுப்பு வேலை செய்து நமக்குத் தேவையான அஞ்சல் பெட்டி (லெட்டர் பாக்ஸ்), சுவற்றில் மாட்டக் கூடிய அழகிய உருவங்கள் போன்றவற்றை உருவாக்க என் தந்தை பயிற்சி வழங்கினார்கள்.

**புத்தகப் பிணைப்பாளராக** (Binder):

என் தந்தைக்கு இருந்த பல வேலைகளின் நடுவிலும், தட்டச்சகத்தின் பழைய புத்தகங்களைத் தானே பைண்டிங் செய்து கொள்வார்கள். அதில் லோயர் தேர்வில் தேர்ச்சியும் பெற்றிருந்தார்கள்.

**நகைச்சுவையாளராக:**

அவர் ஒரு சிறந்த நகைச் சுவையாளர். பேசும்பொழுது அடிக்கடி 'விட்' அடிப்பார்கள். "மனமகிழ்ச்சி நல்ல ஔஷதம்!" என்று நீதிமொழிகள் 17:22-இல் கூறியதை நன்கறிந்து சிரிப்பு வைத்தியத்தை இலவசமாக வழங்கினார்கள். அவருக்கு 'காமன் சென்ஸ்' மட்டும் இல்லை. 'ஹ்யூமர் சென்ஸும்' நிரம்பி வழிந்தது.

சைக்கிள் ஓட்டுபவரிடம் இப்படிக் கூறுவார்கள்: "சைக்கிளைப் பார்த்து ஓட்டுப்பா... ஆள் மேல ஏத்திட்டு பெல் அடிக்காதே!"

பணத்துக்குப் பதில் வைட்டமின் 'ப' என்பார். ஏனெனில் அதற்கு அவ்வளவு சக்தி உண்டு!

**முடிவுரை:**

இப்படிப்பட்ட ஒரு பல்துறை வித்தகரை எங்கள் தகப்பனாராகப் பெற்றமைக்காக ஆண்டவனுக்கு கோடானு கோடி நன்றி!

"பூரணமான எந்த வரமும் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது!"—யாக்கோபு 1:17


கிறிஸ்தவ **வரலாற்றுச் சுவடுகள்**

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் நடத்தும் கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் மாத ஆய்விதழை நண்பர்கள், உறவினர்களுக்கு அறிமுகப்படுத்த அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன். கடந்த நான்கு வருடங்களாக ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து வெளி வந்து கொண்டு இருக்கின்றது. மறைக்கப்பட்ட, மறைந்த, மறந்த வரலாற்றுப் பக்கங்களை அடுத்த தலைமுறையினரின் கரங்களில் கொடுப்பது நம் கடமை.

சங்கத்தின் **'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்'** மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள விரும்பினால் அதற்கான ஆண்டு சந்தா 600 ரூபாய் ஐந்து ஆண்டுக்கான சந்தா 3000 ரூபாய் மட்டுமே. மற்றும் G-Pay மூலம் நன்கொடை செலுத்த விரும்பினால் 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும். காசோலை மற்றும் வரைவோலை செலுத்த **'கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'** (Christian Historical Society) என்ற பெயரில் எடுத்து அனுப்பவும்.

நன்கொடை சந்தா செலுத்திய தகவலை கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசி எண் அல்லது வாட்ஸ் ஆப் அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு மறக்காமல் தெரியப்படுத்தவும்.

**வங்கி விபரம்**

Name: Christian Historical Society

A/c Number : 1748 020000 4906

Bank name : Federal Bank

IFSC code: FDRL0001748



**ஆசிரியர்**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
**கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,**
**பங்களாச் சுரண்டை-627859,**
**தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)**
**04633 290401, 91767 80001**

christianhistoricalsociety.in
tchsportal.co.in
christianhistorical@gmail.com

# சங்க பணிகளுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்

**கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் அன்பின் வாழ்த்துக்கள்.**

பூர்வ நாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைச் கவனித்துப்பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான், உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள். உபாகமம் 32.7

ஒருங்கிணைந்த திருநெல்வேலி திருச்சபை உருவாகி சுமார் இரண்டரை நூற்றாண்டுகளாகின்றன. பராபரனின் பெரிதான கிருபையினால் இன்று திருமண்டலங்களாகவும், பல நூறு திருச்சபைகளாகவும் பெருகி வந்து கொண்டு இருக்கின்றது. பராபரனுக்கு ஸ்தோத்திரம். திருச்சபை சரித்திரத்தை அறிய வேண்டிய அவாவும் மக்கள் மனதில் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது. இந்நிலையில் **'யார் நமது காரியமாய் போவான்,' இதோ அடியேன் இருக்கின்றேன், என்னை அனுப்பும்'** என்று ஏசாயா தீர்க்கன் முன் வந்தது போல திருநெல்வேலி வரலாற்றை மீள் பதிப்பு செய்யவும், வரலாற்று பணிகளை கள ஆய்வுப் மேற்கொள்ளவும், நின்றுபோன வரலாற்று **'தொடரோட்டத்தை தொடரவும்'** கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட இயக்கமே **' கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்கள் பலரின் அரும்பெரும் முயற்சியினால் தொடங்கப்பட்டது. நம்முடைய வரலாற்றுச் சங்கத்தின் தரிசனத்தில், இறையியல் கல்லூரி மாணவர்கள் பலர் தன்னார்வத்தோடு தங்களையும் இணைத்து செயல்பட்டு வருகிறார்கள். மேலும் தமிழ்நாடு முழுவதும் உள்ள பல வரலாற்று ஆய்வாளர்களுடன் கைகோர்த்து இப்பணியைச் செய்து வருகின்றோம்.

வரலாற்றுச் சங்கமானது கடந்த ஐந்து ஆண்டுகளாக உங்களுடைய ஜெபத்தினாலும் பேராதரவினாலும், மிகச்சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. நமது பத்து அம்ச திட்டங்களில் மாத ஆய்விதழ், பழைய புத்தகங்கள் சேகரித்தல் மற்றும் டிஜிட்டல் செய்யும் பணி, புத்தக மறுப்பதிப்பு பணிகள், நூலகப் பணிகள், மிஷன் சுற்றுப்பயணம், புத்தக வனம் இணைய செயலி, ஆவணப்படம் தயாரித்தல், மிஷன் அருங்காட்சியகம், ஆய்வுக் கருத்தரங்கம் போன்ற பணிகளை கடந்த ஆண்டுகளில் செய்து வருகின்றதை நீங்கள் அறிந்ததே.

இந்த ஆண்டிலும் வரும் ஆண்டுகளிலும் நமது இலக்குகளை அதிகப்படுத்தி இருக்கின்றோம். குறிப்பாக **புத்தக மறுப்பதிப்பு, நூலக கட்டிட பணிகள், மிஷன் அருங்காட்சியகம்** மேற்கண்ட பணிகளை செய்ய வேண்டிய தேவையில் இருக்கின்றோம். இப்பணிகளில் நீங்கள் குடும்பமாகவோ, இயக்கமாகவோ அல்லது தனி நபராகவோ இணைந்து செயல்படவும் பங்கு பெறவும் அன்புடன் அழைக்கின்றோம்.

**நம் சங்கத்தின் பத்து அம்ச செயல்திட்டத்தை நினைவுபடுத்துகின்றோம்:-**

தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் நீண்ட இடைவெளிக்கு பின்பு மீண்டும் ஒரு வரலாறு படைத்துக் கொண்டு இருக்கும் மாத ஆய்விதழ் தான் **'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்'**. கடந்த 2020ம் ஆண்டு ஜீன் மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு தலைப்பைக் கொண்டு பல்வேறு அரிய ஆய்வுக் கட்டுரைகளோடு மிக சிறப்பாக வெளி வந்து கொண்டிருக்கிறது. **மறைக்கப்பட்ட, மறந்த, மறைந்த** மிஷனெரிகள் மற்றும் திருச்சபை வரலாறுகள், கள ஆய்வுகள், பல்வேறு அரிய வரலாற்று பொக்கிஷங்களுடன் தமிழகம் முழுவதும் தொடர்ந்து 1530 க்கு மேற்பட்ட வாசகர்களுடன் வந்து கொண்டு இருக்கின்றது.

- காலவோட்டத்தில் அறுபட்டுக்கிடந்த இசைத் தமிழ் கண்ணிகளைத் தற்கால இசைத் தமிழ் உலகுக்குக் கோர்த்துக் கொடுத்த மாபெரும் இசைத் தமிழ் அறிஞர் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் அவருடைய அளப்பரிய செயல்களை நினைவுகூறும் வகையில் **ஆபிரகாம் பண்டிதர் நினைவு மின்னனு ஆராய்ச்சி நூலகம்** நம்முடைய சங்கத்தின் சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகமானது தமிழ் கிறிஸ்தவ மின்னனு நூலகத்தில் **முதல் நூலகம்** என்ற சிறப்பைப் பெற்றது. இந்த நூலகமானது தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், தமிழ் கிறிஸ்தவ ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் ஒரு புதிய மைல் கல்லாகவும் அமையும். மேலும் அநேக புதிய தமிழ் கிறிஸ்தவ எழுத்தாளர்களை உருவாக்கவும், ஆராய்ச்சியாளர்களை உருவாக்கவும் இது உதவியாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, மறுபதிப்பு செய்து வெளியிடப்படாத கிறிஸ்தவ மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு புத்தகங்களை மறுபதிப்பு செய்து வருகின்றோம். குறிப்பாக நெல்லை திருமண்டல வரலாற்று அறிஞர் பேராசிரியர் அருள்திரு **தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர்** அவர்களுடைய படைப்புகளை மறுபதிப்பு செய்து இன்றைய தலைமுறைகளுக்கு கொண்டு செல்லவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றோம். குறிப்பாக கடந்த ஆண்டு பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் அவர்களின் வரலாற்று சிறப்புமிக்க புத்தகம் அனைத்தையும் மறுபதிப்பு செய்து வருகின்றோம்.

- நம்முடைய வரலாற்று சங்கமும் கிறிஸ்தவ ஆய்வு மற்றும் ஆவணப்படுத்து மையமும் இணைந்து **'புத்தக வனம்'** செயலி செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றது. இந்த செயலி தமிழகத்தில் முதல் முறையாக டிஜிட்டல் முறையில் கையடக்க வடிவில் புத்தகமாக முழு நூலகமாக உங்கள் கைகளில் கொடுத்துள்ளோம். இன்னும் பல ஆயிரம் புத்தகங்களை பதிவேற்றும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும் பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் பெயரிலேயே **நினைவு புத்தக அங்காடி** ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- தமிழக வரலாற்றில் கிறிஸ்தவ மிஷனெரிகளுடைய பங்கு குறிப்பிடத்தக்கது. அந்த மிஷனெரிகள் பணி செய்த இடங்கள், அவர்களுடைய நினைவிடங்கள், தங்கியிருந்த இல்லங்கள், கல்லறைகள், வரலாற்று சிறப்புமிக்க ஆலயங்கள், இரத்த சாட்சிகளாக மரித்த மிஷனெரிகள் பணி செய்த மற்றும் தங்களை இரத்த சாட்சியாக ஒப்புக்கொடுத்த இடங்களை தெளிவான முறையில் பார்வையிடவும், வெளியிடங்களிலிருந்து வரும் மக்களின் வசதிக்காகவும் **Mission Tourist Map** என்று செயலி உருவாக்கி அதன் மூலம் அவர்கள் தங்குமிடங்கள், வழித்தடங்கள் அடங்கிய மின்னியல் கையேடு அமைப்பது.
- வரலாற்றின் பக்கங்களில் மறைந்து கிடக்கும் கீர்த்தனை கவிஞர்கள், உபதேசிமார்கள், முன்னாள் குருமார்களுடைய வரலாற்று பொக்கிஷங்களை சேகரித்து வருகிறோம். மேலும் அவர்களுடைய வரலாற்றுத் தகவல்கள், அவர்களால் உருவாக்கப்பட்ட திருச்சபைகள், கிறிஸ்தவ பாடல்கள் உருவாக்கம் பெற்ற வரலாறுகள், பாடல்களின் வரலாறுகளையும் சேகரித்து அதை மின்னியல் முறைக்கு மாற்றும் பணிகளையும் செய்து கொண்டு இருக்கின்றோம்.
- தமிழ் கிறிஸ்தவ பழைய புத்தகங்களை சேகரித்து மின்னியல் முறையில் ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகத்திலும், பேராசிரியர் **அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் நினைவு புத்தக அங்காடி**யிலும் பதிவேற்றம் செய்வதுடன் புத்தகங்களை தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் விதமாக ஒரு சிறந்த ஆய்வு நூலகம் அமைக்கவும் முயற்சிகளும் மேற்கொண்டு வருகிறோம்.
- மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாற்று சம்பவங்களை அடிப்படையாக கொண்டு ஆவணப்படங்களை வெளியிடுவதற்கான முயற்சிகள் செய்து கொண்டு இருக்கிறோம். கர்த்தருக்கு சித்தமானால், வருகிற ஆண்டு **கிளாரிந்தா, ஏமி கார்மைக்கேல்** மிஷனெரிகளின் வரலாற்றை ஆவணப்படமாக்க திட்டமிட்டிருக்கிறோம்.
- தங்களுடைய வசதியான வாழ்வை தியாகம் செய்து நம் நாட்டிற்கு வந்து கோதுமை மணிகளாய் விதைக்கப்பட்ட மிஷனெரிகள் மற்றும் தன் சொந்த மக்களுக்காக தங்களையே அர்ப்பணித்த நம் இந்திய மிஷனெரிகளின் நினைவிடங்கள் மற்றும் கல்லறைகளை கண்டறிவதுடன் திருச்சபையுடன் இணைந்து பராமரித்து அவர்களுடைய தியாகங்களை குறித்த விழிப்புணர்வை திருச்சபை மக்களுக்கு ஏற்படுத்த பணியாற்றி வருகிறோம்.
- வரலாற்றுச் சங்கம் சார்பில் மிஷனெரிகள் பயன்படுத்திய கலை பொருட்கள் மற்றும் புத்தகங்கள், பைபிள், சேகரித்து வரலாற்று **அருங்காட்சியகம்** அமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம். மிஷனெரிகள் பயன்படுத்திய பொருட்களை சேகரித்து வருகிறோம்.
- கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் மற்றும் மேய்ப்பரின் பயிலகம் சார்பாக கடந்த இரண்டு மாதமாக இணையதள **சீர்திருத்த தமிழ் திருச்சபையின் ஆரம்பங்கள்** என்ற தலைப்பில் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது செவ்வாய்கிழமைகளில் இரவு ஏழு முப்பது மணிக்கு நடைபெற்று வருகின்றன.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, கடந்த 2017ம் ஆண்டு அற்பமாக ஆரம்பிக்கப்பட்ட நம்முடைய திருநெல்வேலி **கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** இது வரையிலும் பல்வேறு தடைகளையும், நெருக்கடிகளையும் கடந்து வந்திருக்கிறது. வரலாற்று ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், வாசகர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் ஆகியோருடைய இடைவிடா ஜெபத்தாலும், ஆதரவாலும், உதவியாலும் நம் திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. மேலும் நம்முடைய மாதாந்திர ஆய்விதழும் தடைகளின்றி வெளி வருகிறது. நம்முடைய கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க செயல்பாடுகள் சிறப்பாக அமைய ஜெபத்தாலும், உடலுழைப்பாலும், பொருளாதார வழியிலும் உதவி வரும் அத்துணை நல்லுள்ளங்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். தொடர்ந்து நாம் செயல்பட வேண்டிய தளங்கள் அநேகமுண்டு. இணைந்து செயல்பட அன்புடன் அழைக்கிறோம். வரலாற்றுச் சங்கத்தின் ஓர் அங்கமாக வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் கருவியாவோம். சர்வ வல்லமை கொண்ட ஆண்டவரின் ஆயுதமாவோம்.

christianhistoricalsociety.in/
tchsportal.co.in




## Yearly Subscription

**600**

christianhistoricalsociety.in

Apply Now

# Monthly Magazine for church history

Return Requested:

To

Tamil Printed Book- For Private Cirulation Only

**CHRISTAVA VARALATRU SUVADUGAL**
# 2.2.3(4)North Street,
Bungalow Surandai-627859.
Tenkasi District
Tamil Nadu
Ph: 04633 290401
Mo: **91767 80001**

Owned & Published By CHRISTIAN HISTORICAL SOCIETY, Tamil Eduction- For Private Cirulation Only
Editor|G.MUTHAIAH SELVAKUMAR| at 2.2.3(4)North Street, Bungalow Surandai-627859. Tenkasi District Ph: 04633 290401